# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 23 திங்கட்கிழமை (06-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:86


# இராணுவத்துக்கு ஆள்களை சேர்ப்பது மீண்டும் நீடிப்பு!

## கேரதீவு கடல் பகுதியில் சடலம்

கேரதீவு கடல் பகுதியில் கிடந்ததாக இனம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் சாவகச்சேரிப் பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

துர்நாற்றம் வீசிய நிலையில் எடுத்துவரப்பட்ட இந்தச் சடலம் இனம்காணும் பொருட்டு மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. இராணுவத்தினரால் சுடப்பட்டு இவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## ஒருமாத முயற்சியில் 1,176 பேரே இணைவு

கொழும்பு,மார்ச்6

**இலங்கை இராணுவத்துக்கு 15 ஆயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ளும் நோக்குடன் கடந்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஆள் சேர்ப்பு நடவடிக்கையில் இதுவரை ஆயிரத்து 176 பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.**

**இதனை அடுத்து ஆள் சேர்க்கும் நடவடிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

இராணுவத்துக்கு 15 ஆயிரம் பேரை இந்த வருடம் சேர்த்துக் கொள்வது என்ற திட்டத்தின் கீழ் பல இடங்களில் கடந்த மாதம் முதலாம் திகதி முதல் ஆள் சேர்க்கும் பணி முழுவீச்சில் இடம்பெற்று வந்தது.

இதுவரை ஆயிரத்து 176 பேரே சேர்ந்துள்ளனர் என்றும் -

மேலும் 5ஆயிரம் பேர் விரைவில் சேர்வர் என்று எதிர்பார்க்கப்படுவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கோணேசர் ஆலய சுவாமி வீதி உலா

திருகோணமலை,மார்ச்6

திருகோணமலை கோணேசர் ஆலயவீதியுலா நேற்று மிக உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

நேற்றுப்பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமான வீதியுலா நேற்று நள்ளிரவு வரை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மணிக்கூண்டுச் சந்தியில் சிங்கள வர்த்தகர் அமைத்த பந்தலில் மட்டும் 2 ஆயிரத்து 500 தேங்காய்கள் உடைக்கப்பட்டு காணிக்கை செலுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

தமிழ், சிங்கள மக்கள் என்ற வேறுபாடின்றி இந்த விழாவில் மக்கள் பங்கு கொண்டனர்.

வீதியுலாவை ஒட்டி பல இடங்களில் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. (இ-3)

## தேடுதலுக்குச் சென்ற சிப்பாய் புலிகளால் கடத்தப்பட்டார்

### தோப்பூர் பகுதியில் சம்பவம்

திருகோணமலை,மார்ச்6

திருகோணமலை மூதூரில் தோப்பூர் கிராமத்தில் தேடுதல் நடவடிக்கையை முடித்துத் திரும்பிய படையினரில் ஒரு சிப்பாயை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து நேற்று அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் பிரஸ்தாப சிப்பாயை தேடியதாகவும் -

ஆனால் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சிறைக் கைதிகளைப் போன்று எம்மைக் கூட்டிச் சென்றனர்

### கேதீஸ்வரம் சென்று திரும்பிய பக்தர்கள் தகவல்

மன்னார், மார்ச்6

திருக்கேதீஸ்வரம் ஆலய வழிபாட்டுக்காக எம்மைக் கூட்டிச்சென்ற படையினர் கைதிகளை சிறைச்சாலைக்கு கூட்டிச்செல்வது போன்று அழைத்துச் சென்றனர்.

மேற்கண்டவாறு அங்கு சென்று திரும்பிய பக்தர்கள் கருத்து வெளியிட்டனர்.

திருக்கேதீஸ்வரத்தில் நேற்று நடந்த விசேட வழிபாடுகளில் பங்கு பற்றுவதற்காக மன்னாரில் இருந்து சுமார் 600பக்தர்கள் நேற்று அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கறுப்புத் துணிகளால் கண்ணாடிகள் யாவும் மூடப்பட்ட பஸ்களில் சிறைச்சாலைக் கைதிகள் போன்று தம்மை திருக்கேதீஸ்வரத்துக்கு அழைத்துச் சென்றனர் என்று பக்தர்கள் தெரிவித்தனர்.

ஆலயத்தில் முழு ஈடுபாட்டுடன் வழிபாட்டில் ஈடுபடக்கூடிய மனநிலை அங்கு காணப்படவில்லை. அங்கே படையினர் எம்மை நல்ல முறையில் நடத்தவில்லை என்றும் பக்தர்கள் தெரிவித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கடலில் வள்ளம் மூழ்கடிப்பு!

### கடற்படையினர் தாக்குதல்

கொழும்பு, மார்ச்6

முல்லைத்தீவுக்கு வடகிழக்குப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய வள்ளம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அதை மூழ்கடித்ததாக பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

சந்தேகம் கொண்ட கடற்படையினர் அந்த வள்ளத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்த்தனர் என்றும்-

எச்சரிக்கையை மீறி கரையை நோக்கி அந்த வள்ளம் நகர்ந்ததாகவும் -

அதைத் தொடர்ந்து அதன் மீது பீரங்கித்தாக்குதல் நடத்தி அந்த வள்ளத்தை தாங்கள் மூழ்கடித்துவிட்டனர் என்றும் - பாதுகாப்புத் தரப்பு கூறியுள்ளது. (இ-க-3)

## கொலைகள், கொள்ளைகள் சிப்பாய் தேடப்படுகின்றார்

### பலாலியில் பணி புரிந்தவராம்

கொழும்பு,மார்ச்6

அம்பலாங்கொடையில் இடம்பெற்ற நான்கு கொலைகள் மற்றும் மூன்று கொள்ளைச் சம்பவங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டதாக பலாலித்தளத்தில் பணிபுரிந்த சிப்பாய் ஒருவரைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

பலாலித்தளத்தில் பணிபுரிந்த பிரஸ்தாப சிப்பாய் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் விடுமுறையில் சென்றார் என்றும் -

பின்னர் அவர் வேலைக்குத் திரும்பவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இவரது வீட்டை நேற்றுசோதனை செய்த பொலீஸார் அங்கிருந்து ரி-56ரக துப்பாக்கி ஒன்றையும் பெருமளவிலான தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

பிரஸ்தாப நபர் அங்கு இல்லாததால் முன்னாள் கடற்படை சிப்பாயான அவரது தந்தையை பொலீஸார் கைது செய்துள்ளனர். (இ-3-9)

## ஆலயப் பகுதியில் இருந்து மட்டும் படையினர் விலகி இருந்தனர்

மன்னார்,மார்ச்6

திருக்கேதீஸ்வரம் ஆலயப் பகுதியில் இருந்து மட்டும் படையினர் விலகி இருந்தனர் என்று அங்கு சென்று திரும்பிய பக்தர்கள் தெரிவித்தனர்.

ஆலய கர்ப்பக்கிரக மண்டபம், சம்பந்தர் மண்டபம், தேரடி ஆகிய பகுதிகளில் இருந்தே படையினர் விலகியிருந்தனர் என்றும் -

ஆலய உற்சவத்துக்காகவே படையினர் விலத்தி இருந்தனர் என்றும் -

தாம் நேற்று நண்பகல் அங்கிருந்து திரும்பிக் கொண்டிருந்த சமயம் படையினர் ஆலயத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர் என்றும் - பக்தர்கள் தெரிவித்தனர்.

ஆலயச் சுற்றாடலில் இருந்து படையினர் விலத்தி நின்ற போது ஆயுதங்கள் இல்லாமல் ஆலய சுற்றாடலில் காணப்பட்டனர் என்றும் பக்தர்கள் கூறினர். (இ-3)

## ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள்

மட்டக்களப்பு, மார்ச்6

இரு பெண்குழந்தைகள் தலை ஒட்டியபடி பிறந்த அதிசயம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லாற்றைச் சேர்ந்த பெண் ஒருவரே இந்தக் குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

இரு குழந்தைகளும் தாயாரும் நலமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குழந்தைகளின் உடம்பு வெவ்வேறாக இருக்கின்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அமைப்புக்கு எதிராக சுவிஸில் நடவடிக்கை இல்லை

### குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனத் தெரிவிப்பு

பேர்ன், மார்ச்6

சுவிஸில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு மதிப்பளித்தே விடுதலைப்புலிகளின் கிளை இயங்குகின்றது. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கத்தேவையில்லை.

மேற்கண்டவாறு சுவிஸ் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அமைச்சரவையில் உரையாற்றிய அரச சட்டத்தரணியான தோமஸ் லைம் "விடுதலைப் புலிகள் ஏனைய அமைப்புக்கள் போன்றே செயற்படுகின்றனர். ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவே அவர்கள் போராடி வருகின்றனர். சுவிஸில் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை" என்று கூறினார்.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்ந்த அமைச்சரவை விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகளுக்கு தடைவிதிக்கத் தேவையில்லை என்ற கருத்தை ஏற்றுக்கொண்டதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (இ-3)

## 6,500 ஈழத் தமிழருக்கு சுவிஸில் அரசியல் தஞ்சம்!

பேர்ன்,மார்ச்6

1992 டிசெம்பர் மாதம்31 ஆம் திகதிக்கு முன்னர் சுவிட்ஸர்லாந்துக்கு வந்த ஆறாயிரத்து 500 ஈழத்தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்க அந்தநாட்டு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

சுவிஸில் பேர்ன் நகரில் கூடிய அமைச்சரவை 14 விடயங்கள் குறித்து ஆராய்ந்து முடிவுகளை எடுத்தது.

அவற்றில் அகதிகள் அந்தஸ்து விடயமும் ஒன்றாகும்.

சுவிஸில் ஏழு வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் 13ஆயிரம் வெளிநாட்டவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இவர்களில் 6ஆயிரத்து 500பேர் ஈழத்தமிழர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# மெய்வல்லுநர் போட்டிகள்

சாவகச்சேரி,மார்ச்6

சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் சு.சேய்சோதிநாதன் தலைமையில் நடைபெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்விவலய நிர்வாக உதவியாளர் க.வீரசிங்கம், முன்னாள் அதிபர் க.அரியதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (ஜ-31)

* * *

வலிகாமம்தெற்கு,மார்ச்6

வலிகாமம் கல்விவலய உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற உள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவும் மக்கள் வங்கி யாழ். மாவட்ட பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவபாதமும் கலந்து கொள்கின்றனர்.(ஜ-152)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்6

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் தி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பெருந்தெருக்கள் திணைக்களத்தைச் சேர்ந்த லயன் கி.நடராசா கலந்து கொள்வார். (ஜ-7)

* * *

நல்லூர்,மார்ச்6

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நாளைமறுதினம் புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் வீ.மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவரும் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நிதி உதவியாளருமான க.கனகரத்தினமும் சிறப்பு விருந்தினராக வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஜி.தெய்வேந்திரராஜாவும் கலந்து கொள்வர். (ஜ-103)

* * *

தென்மராட்சி,மார்ச்6

பளை, கொடிகாமம் ஆகிய கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை 1.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மைதானத்தில் கோட்டக் கல்வி அலுவலர் சு.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் மு.வ.செல்வராசா கலந்து கொள்வார்.

நிகழ்வின் இடைவேளை உடற் பயிற்சி கண்காட்சியினை நடத்த வேம்பொடுகேணி இ.சி.த.க. பாடசாலை உடற்பயிற்சிக் குழு அழைக்கப்பட்டுள்ளது. (ஜ-117-133)

* * *

கொக்குவில்,மார்ச்6

கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் பொ.பத்மநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயனும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் வே.திருநாவுக்கரசு, பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி க.பூபாலசிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் ஜி.சாந்தமோகனும் கலந்துகொள்வர். (ஜ-8-69)

* * *

சண்டிலிப்பாய்,மார்ச்6

மானிப்பாய் மகளிர் கல்லூரி வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளைமறுதினம் புதன் கிழமை கல்லூரி அதிபர் திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக கல்லூரி முன்னாள் அதிபரும் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்

(11 ஆம் பக்கம் பார்க்க)


## புலமைப் பரிசில் 2000

27.02.2000 ஞாயிறு
பரீட்சையில் விடை திருத்தம்
பகுதி II வினா இல:-72
சரியான விடை :- 23

**அதிகூடிய புள்ளி பெற்றோர்**

1) ச.லக்ஷிகா (யா/இ/ஆ/பா)
2) பா.தர்மினி (யா/வட/இ/ம/க)
3) ஜெ.ஜெனோஜினி (யா/உ/சை/த/வி)
4) சி.ஆதிரையன் (யா/இ/ஆ/பா)
5) அ.டினேஷ் (யா/இ/ஆ/பா)
6) வி.யசோதா (யா/இ/ஆ/பா)
7) கு.யோகானந்தி (ஆ/மெ/மி/பா)
8) ஜெ.கிருத்திகா (யா/இ/ஆ/பா)

**BOND**
யாழ்நகர். (74225)


## செம்மணி விவகாரம்:
# நீதிமன்ற உத்தரவு கிடைக்கவில்லை என்கிறது குற்றப் புலனாய்வுத்துறை

கொழும்பு, மார்ச்6

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக ஏழு படையினரைக் கைதுசெய்யும்படி யாழ். நீதிமன்றம் விடுத்த உத்தரவு இன்னமும் தமக்குக் கிடைக்கவில்லை என்று குற்றப்புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி யாழ்.மேலதிக நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது செம்மணி புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடைய ஏழு படையினரைக் கைதுசெய்து எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ். மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவு பிரதி நீதிமன்றப் பதிவாளரினால் இன்னமும் தமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் -

இந்த உத்தரவு கிடைத்தவுடன் அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுப்போம் என்றும் - குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரி தெரிவித்தார்.

நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஏழு படையினரில் ஒருவர் உயிரிழந்துவிட்டார் என்றும் அவர் மேலும் சொன்னார். (இ-3-164)

## அரங்கத் திறப்பு விழா

நெல்லியடி,மார்ச்6

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட அற்புதர் அரங்கத் திறப்பு விழாவும் நன்றி உபசார வைபவமும் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இந்த வைபவத்தில் யாழ்.பங்குத் தந்தை அருட்திரு பி.எம். இம்மனுவல் அடிகளினால் அரங்கு திரை நீங்கம் செய்யப்படும். பின்னர் திருப்பலி பூசையுடன் நன்றி உபசார வைபவமும் இடம்பெறும் (இ-109)


## லிபேட்டி

அச்சுவேலி
**அருண்பாண்டியன்,பிரகாஷ்ராஜ், சுமன்**
மற்றும் பலர் நடித்த
*காக்கிச் சட்டையா? கறுப்புச் சட்டையா?*
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P :- 070-212223
070-212678
(74112)

## ராஜா

யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
08-03-2000 வரை
**சரத்குமார், தேவயானி** நடித்த
**சூர்யவம்சம்**
09-03-2000 முதல்
**படையப்பா**
காட்சிகள்
10.30 , 2.30
(C/11282)

## நாகம்ஸ்

சுன்னாகம்
இன்று முதல்
**அஜித், சிம்ரன்** நடித்த
*அவள் வருவாளா?*
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11243)


# பொலீஸாரிடமிருந்து முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச்6

பொலீஸார் தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இரண்டாயிரம் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர் என்று சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் குணசேன சேனபந்து தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளில் சுமார் தொளாயிரம் முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் -

பெரும்பாலான முறைப்பாடுகள் அவர்களின் இடமாற்றம் தொடர்பானவை என்றும் - அவர் மேலும் சொன்னார்.

பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கின் பணிப்புரைக்கு அமைய பொலீஸாரின் சேம நலன்களைக் கவனிக்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.(இ-க-3)

## கண்ணீர் அஞ்சலி

கிளி/வேம்பொடுகேணி பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்

அமரர்

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பு

(ஓய்வுபெற்ற அதிபர், சோரன்பற்று கணேச வித்தியாலயம்)

அவர்கள் 29.02.2000 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.இராமலிங்கம்,
(அதிபர், வேம்பொடுகேணி பாடசாலை)
சி.இராசதுரை (பாலு),
அம்பாள் களஞ்சியம் (வேம்பொடுகேணி)

வேம்பொடுகேணி,
பளை (74227)

## ஸ்கந்தாவின் கண்ணீர் அஞ்சலி

### அமரர் பொ.வேலாயுதம் (வெக்டர்)

எமது கல்லூரியின் பழைய மாணவனும் கணித மாமேதையுமான அமரர் பொ.வேலாயுதம் அவர்களின் மறைவால் கலங்கி நிற்கும் அவரது குடும்பத்திற்கும் கல்விச் சமூகத்துக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம். (74222)

## மரண அறிவித்தல்கள்

### தியாகராசா அன்பகிலன்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா அன்பகிலன் நேற்றுமுன்தினம் (04.03.2000) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தியாகராசா - ரதிலீலாவதி தம்பதிகளின் ஏக புத்திரனும் இரத்தினம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.தியாகராசா
(தந்தை)

'ரதி இல்லம்'
(ஆஸ்பத்திரி முன்)
சாவகச்சேரி. (74229)

### திருமதி சின்னத்துரை சின்னம்மா

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்துரை சின்னம்மா நேற்று (05.03.2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, புஸ்பராணி (ஆசிரியை, யாழ். மகேஸ்வரி வித்தியாலயம்), தங்கலெட்சுமி, ரதி, இந்திரகுமார், பத்மாவதி, தியாகேஸ்வரி, பானு ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மார்க்கண்டு, பாக்கியம், அன்னலெட்சுமி, காலஞ்சென்ற கனகசபாபதி, யோகம்மா, குமாரசாமி, கந்தசாமி ஆகியோரின் அன்புமிகு சகோதரியும் குணரத்தினம், ரவிந்திரநாதன் (மின்சார சபை, யாழ்ப்பாணம்), சௌந்தர ராசன் அரியகுமார், தனபாலன், இளங்குகராசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2000) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு 263, ஆனந்தன்வடலி வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை.தெய்வேந்திரம்
(பேரமகன்)

இல. 263, A.V. வீதி,
அரியாலை. (74228)


*குளிர்மையின் மறுபெயர்!*

**NIPPON**

இலங்கையில் அதிகூடிய தெரிவு 30 ரகும் மேற்பட்ட மாதிரிகள்!

**மின்விசிறிகள்**

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.

# வன்னியில் அ.அட்டை தொலைத்தோர்

# மீளப் பெறமுடியாது பெரும் அவதி

வவுனியா, மார்ச் 6

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் அடையாள அட்டையைத் தொலைத்த பலர் மீளப்பெற விண்ணப்பித்து மூன்று வருடகாலமாகியும் இதுவரை அவர்களுக்கு அடையாள அட்டைகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு ஊடாக விண்ணப்பங்களை அனுப்பிய பலர் தமக்கு இன்னும் அடையாள அட்டை கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர்.

அடையாள அட்டை இல்லாததால் சம்பந்தப்பட்டோர் பல்வேறு சிரமங்களையும் பாதிப்புகளையும் சந்தித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வோர் அடையாள அட்டை இன்றி அங்கு போக முடியாத நிலையில் உள்ளனர்.

இது விடயத்தில் பிரதேச செயலர்களும் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் எனப் பாதிக்கப்பட்டோர் கோரி உள்ளனர்.

(ஐ-164)

## மண்டை ஓடுகளைப் புதைக்குமாறு உத்தரவு

நெல்லியடி, மார்ச் 6

வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் மாலுசந்தி வீதியில் பழைய கராஜ் கட்டடத்திற்கு அருகில் கடந்த வெள்ளியன்று கண்டுபிடிக்கப்பட்ட இரு மண்டை ஓடுகளையும், அப்பகுதியில்புதைக்குமாறு நெல்லியடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பணித்துள்ளார்.

இந்த இரு மண்டை ஓடுகள் சம்பந்தமாக அப்பகுதியைச் சேர்ந்த சு. பூரணம் பிள்ளை என்பவர், அப்பிரிவின் கிராம சேவை அலுவலருக்கு முறையிட்டிருந்தார்.

இதுகுறித்துக் கிராமசேவை அலுவலர்நெல்லியடிபொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டதை அடுத்தே, இதனைப் புதைப்பதற்கு நடவடிக்கைஎடுக்குமாறு, பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் பணிக்கப்பட்டது.

(இ-109)

## விதவைகள் விவரம் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு, மார்ச் 6

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள விதவைகள் பற்றிய பூரணவிவரம் தற்போது பிரதேசசெயலகத்தினால் திரட்டப்பட்டுவருகின்றது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் விதவைகளாகியுள்ளோரின் விவரங்களே திரட்டப்படுகின்றன.

பிரதேச செயலகத்திற் குட்பட்ட ஒவ்வொரு கிராம சேவையாளர்களுக்கும் உதவியாக ஒவ்வொரு சமுர்த்தி உதவியாளரும் சமூகசேவை உத்தியோகத்தரும்இணைந்து குறிக்கப்பட்ட தினங்களில் இவ் விவர சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஐ-152)

# விசர் நாய்க் கடியினால் 2வயது குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஒரு மாதத்துக்கு முன் விசர்நாய்க் கடிக்கு இலக்கான 2 வயதுஆண்குழந்தை ஒன்று ஒருமாதத்தின் பின்னர் விசர் நோய்க்கு இலக்காகி மரணமானது.

விசர்நாய் கடிப்பதால் ஏற்படும் நீர்வெறுப்பு நோய்க்கு எதிரான தடுப்பு ஊசியை போட்டுக் கொள்ளாததாலேயே இக்குழந்தை உயிரிழக்க நேர்ந்துள்ளது.

ஆவரங்காலைச் சேர்ந்த தங்கராசா சாருஜன் (வயது2) என்னும் குழந்தையே இறந்தது.

குழந்தை இறந்ததை அடுத்து கடந்த ஒரு மாத காலமாகக் குழந்தையைப் பராமரித்து வந்த அதன் பெற்றோர் உறவினர்கள் எட்டுப் பேர் — டாக்டர்களின் அறிவுறுத்தலை அடுத்து — ஏ. ஆர். வி. தடுப்பு ஊசி போடத்தொடங்கி உள்ளனர்.

(ஐ-15)

## புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 6

இணுவில் கிழக்கு சிவகாம சுந்தரி சனசமூக நிலைய புதிய கட்டடத்திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்கான நிதி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரின் 'கானலில் ஒரு கப்படா காண்டம்' என்ற நாடக நிகழ்வின் மூலமும் —

இணுவில் பகுதி மக்களின் உதவிகள் மூலமும் பெறப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-9)

# சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரிக்கு மேலும் ஒரு பஸ்

புன்னாலைக்கட்டுவன்மார்ச்6

சங்கானை, சுன்னாகம் ஊடாக சாவகச்சேரி வரையான 775 இலக்கப் பாதை பஸ் சேவையில் மேலும் ஒரு பஸ் கடந்த புதன்கிழமை முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இரண்டு பஸ்கள் இப்பாதை ஊடாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் சந்தைகளுக்குச் செல்லும் வியாபாரிகளின் வசதி கருதி மேலும் ஒரு பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த பஸ் சங்கானை பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து காலை 9.30 மணிக்குப் புறப்படும்.

775 இலக்க பஸ் சேவை சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய மூன்று சந்தைகளையும் இணைக்கும் சேவையாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(க-133-27-117)

# சிறுவர்களைச் சீராக வளர்ப்பின் நாளைய சமுதாயம் சீர்பெறும்

## பாராட்டு விழாவில் உரை

அரியாலை, மார்ச் 6

''காலம் கெட்டுப் போச்சு, சமுதாயம் சீரழிந்து விட்டது. என இன்று பலர் புலம்புகிறார்கள். ஆனால் கெட்டது காலம் அல்ல நாம் தான் என்பது பலருக்குத்தெரிவதில்லை. நாம் சரியாக இருந்தால் — எமது சிறார்கள் ஆன்மீக கல்வியுடன் நல்லொழுக்கப் பண்பாடுகளுடன் சீராக வளர்க்கப்பட்டிருந்தால் — எமது சமுதாயம் சிறப்பாகத் திகழ்ந்திருக்கும். நாளைய சமுதாயம் சிறப்புடன் திகழ வேண்டுமெனில் இன்றைய சிறார்களைச்சரியாகவளர்க்க வேண்டும்.''

யாழ். பண்டியன் தாழ்வு ஸ்ரீ ஞானவைரவ ஆலய உற்சவ காலங்களில் தொடர்ந்து பதினைந்து நாள்களாகக் கூட்டு வழிபாடு நடத்திய சிறுவர்களைப் பாராட்டி அவர்களுக்கு அறநெறி நூல்களை வழங்கிய நிகழ்வில் உரையாற்றிய ஓய்வு பெற்ற அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசன் இவ்வாறு தெரிவித்தார். ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீபாலசர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய கா. கணேசதாசன் கூறியதாவது:—

''இறைவன் திருநாமமே அச்சத்தைப் போக்கவல்லது. கூட்டு வழிபாட்டினால் துயர்கள் யாவும் அகலுவதுடன் மனதில் தீய எண்ணங்கள் நீங்கி நல்ல எண்ணங்கள் ஏற்படும். நாம் எல்லோரும் ஒற்றுமையாகக் கூட்டு வழிபாட்டில் ஈடுபடும்போது போட்டி, பொறாமை, சுயநலம், வேற்றுமை யாவும் அற்று எமக்குப் பரந்த மனப்பான்மையும் பொதுநல நோக்கும் ஏற்படும். மக்கள் மனச்சாந்தி பெறுவதற்கு கூட்டு வழிபாடு சிறந்த மருந்தாகும். இன்றைய சூழ்நிலையில் ஆலயங்களே எமக்குத் தஞ்சமளிக்கின்றன. இறை வழிபாட்டினாலேயே எமது இன்னல்களைத் தீர்க்க முடியும். சிறார்களுக்குப் பால்ய வயதிலிருந்தே நற்பண்புகள் ஊட்டப்பட வேண்டும். பண்பாளர்களாக நல்லெண்ணம், உயர்வான நோக்கம், இறைபக்தி, மனித நேயம் என்பன கொண்டவர்களாக வளர்க்கப்படல் வேண்டும். பிஞ்சு உள்ளத்தில் இலகுவில் பதிந்துவிடும் எண்ணங்கள் வயது சென்றாலும் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும். ஆகவே சிறுவயதிலிருந்தே சிறார் உள்ளங்களில் நல்ல எண்ணங்களைப் பதித்து விடச் செய்ய வேண்டும். அறநெறி பிறழாத நற்பிரஜைகளாக ஆக்குதல் பெற்றோர்களது தலையாய கடமையாகும்— என்று கூறினார்.

(ஐ-17-30)

# செய்திக் கொத்து

## மண்டபம் திருத்தப்படும்

குருநகர், மார்ச் 6

யாழ். மத்திய கல்லூரியில் சேதமடைந்த நிலையிலுள்ள 'றொமெயின்' மண்டபம் இவ்வருடம் திருத்தியமைக்கப்பட உள்ளது.

இக்கட்டடத்தைத் திருத்தியமைக்க 30 லட்சம் ரூபாவை வழங்க ஈ.பி.டி.பியின் செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துத் தமக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார் என யாழ். மத்திய கல்லூரி அதிபர் சு. இராசதுரை தெரிவித்துள்ளார்.

(க-51)

## கசிப்பு அழிப்பு

அச்சுவேலி, மார்ச் 6

அச்செழு, உரும்பிராய் கிழக்குப் பகுதியில், கிராம சேவையாளர் மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் குழு கசிப்பு வேட்டையில் ஈடுபட்டு பெருமளவில் கசிப்பு மற்றும் கோடாவைக் கண்டுபிடித்து அழித்துள்ளது.

(க-11)

## மனையியற் கூடம் புனரமைப்பு

திருநெல்வேலி, மார்ச் 6

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் மனையியற் கூடமும் ஆசிரியர் அறையும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் இக்கல்லூரியில் இரண்டு தொகுதி புதிய மலசல கூடங்கள் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிதி உதவி மூலம் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை

வடக்கு — கிழக்கு மாகாண கல்வியமைச்சு ஒதுக்கீடு செய்த நிதியைக் கொண்டு கல்லூரியின் விசாலாட்சி மண்டபம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது என்று கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா தெரிவித்தார்.

(ஐ-135)

## சுருக்கிட்டு மரணம்

நெல்லியடி, மார்ச் 6

பிரதேச சபையின் கீழ் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்துக் கலவையாளரான இளம் யுவதி ஒருவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு அல்வாய் மேற்கில் இடம்பெற்றது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அல்வாய் பகுதி உப அலுவலக ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்துக் கலவையாளரான இதே இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் வசந்தமலர் (வயது32) என்பவரே மரணமானவராவார்.

இம்மரணம் சம்பந்தமாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் பிரேத பரிசோதனை நடத்தினார். பருத்தித்துறை பதில் நீதிவான்சு.பா.சுப்பிரமணியம் மரண விசாரணையையும் மேற் கொண்டபின், தற்கொலை என்று தீர்ப்பு வழங்கிச் சடலத்தைதிக்கம் பங்குவேம்படி மயானத்தில் புதைக்குமாறும் உத்தரவிட்டார்.

(ஐ-109)

## பண்ணிசை வகுப்பு

கொழும்புத்துறை, மார்ச் 6

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் ஆதரவில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4.30 மணிக்கு பண்ணிசை வகுப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ்வகுப்பில் பங்கு பற்றிப் பயன்பெற விரும்புவோர் நிலையத் தலைவருடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

## இலவச ஆங்கில வகுப்பு

குருநகர், மார்ச் 6

குருநகர் பிரான்ஸ் கல்விக்கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புக்கள் குருநகர் கலை அரங்கில் நடத்தப்பட்டு வருகின்றன.

தரம் நான்கிலும் அதற்கு மேலுள்ள வகுப்புக்களிலும் கல்வி பயிலும் — குருநகரைச் சேர்ந்த மாணவ மாணவிகள் இவ் வகுப்பில் கலந்து பயன் பெறமுடியும் என இதன் தலைவர் மு. நெல்சன் தெரிவித்துள்ளார்.

(க-51)

## நூல் வெளியீடு

கொழும்புத்துறை, மார்ச் 6

அருள் திரு. அன்ரன் மத்தாயஸ் எழுதிய 'இன்றைய உலகில் நாம்' எனும் நூலின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 7 ஆம் திகதி மாலை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ். மறைக்கல்வி நிலையத்தில் கவிஞர் யாழ். ஜெயம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வைபவத்தில் யாழ். ஆயர் பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆடிகளார் ஆசியுரை வழங்கி நூலை வெளியிட்டு வைத்தார்.

(ஐ-30)

## தட்டச்சுப பயிற்சி

சண்டிலிப்பாய், மார்ச் 6

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் ஆங்கிலத் தட்டச்சு மற்றும் ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகள் இதனை பயன்படுத்தி பயிற்சியைப் பெற முடியும் என்று கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தெரிவித்தார்.

(ஐ-135)

## பாலர் கலைவிழா நடத்த முடிவு

சண்டிலிப்பாய், மார்ச் 6

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பாலர் பாடசாலைகளின் கலைவிழா ஒன்றை விரைவில் நடத்துவது என்று வலிகாமம் மேற்கு பாலர் பாடசாலை ஆசிரியர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வலிகாமம் மேற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ஹேமா சிவசோதி தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற மேற்படி சங்கக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஐ-135)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## காசிப்பிள்ளை நந்தகுமாரன் (இராசா)

(லயன்)

(உரிமையாளர்: மங்கை ஸ்ரோர்ஸ், கரந்தன்)

மலர்வு 21-10-1950 உதிர்வு 05-02-2000

கடந்த 05—02—2000 சனிக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் காசிப்பிள்ளை நந்தகுமாரன் அவர்களின் பூதவுடல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதற்கு பல வழிகளிலும் உதவியோருக்கும் நீர்கொழும்பில் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இவ்விடம் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும் அனைத்து வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் இரங்கல் உரை ஆற்றியோருக்கும் மலர் வளையங்கள் வைத்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரது நினைவாக அவரது இல்லத்தில் இன்று (06-03-2000) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

மங்கை ஸ்ரோர்ஸ்,
கரந்தன், நீர்வேலி. (74117)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி யோகராணி சிவராசா

திதி 06-03-2000

மலர்வு; 30-04-1960 உதிர்வு; 10-03-1997

ஆண்டுமூன்று மறைந்ததம்மா
உன் அன்பு முகம் மறையவில்லை

உங்கள் பிரிவால் துயருறும்
**பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.**

மட்டுவில் மத்தி,
சோமஸ்கந்த ச. ச. நிலையம், அருகில்,
சாவகச்சேரி. (74208)

## விஞ்ஞான கூடம் புனரமைப்பு

கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாலயத்தில் போரினால்சேதமடைந்த விஞ்ஞானக்கூடம் ஜேர்மன்தொழில்நுட்ப நிறுவன உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டடத்திற்குதேவையான பொருளுதவி மற்றும் தொழிலாளர்களுக்கான கூலியின் ஒரு பகுதி என்பனவற்றை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கி வருகிறது.

இக்கட்டட அமைப்பிற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 60 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கியுள்ளது. (ஐ-69)

## இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

கொக்குவில் மார்ச் 6

கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாலயத்தில் இராமகிருஷ்ண ஜெயந்திவிழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை பகல் 11-00 மணிக்கு வித்தியாலய அதிபர் இ. சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறும்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைச் சாரதா சேவாச்சிரம முதல்வர் சித்ரூபானந்தா சுவாமிகள், திருநெல்வேலி இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த இராஜமகேந்திரன், நல்லூர்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன், சாயி சமித்தியைச் சேர்ந்த சிவஞானம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ-69)

## கலைப் போட்டி

வடமராட்சி, மார்ச் 6

அரியாலை 81 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை ஒட்டி முன்னோடி கலை, விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்களிடையே நடத்தப்பட்டு வரும் கலைப் போட்டி வரிசையில் நாட்டுப் பாடல் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமையும், சங்கீத வாய்ப்பாட்டுப் போட்டி 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் அரியாலை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-173-86)

## சைக்கிள் திருட்டு

பூட்டிய நிலையில் வீட்டு வாயிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆண்கள் சைக்கிள் ஒன்று பகல் வேளையில் காணாமல் போயுள்ளது

இந்தச் சம்பவில் கடந்த வாரம் ஈவினைப் பகுதியில் இடம்பெற்றது. (ஐ-69)

## கரபந்தாட்ட ஆடுகளம்

வடமராட்சி, மார்ச் 6

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஓய்வு வேளையில்ஊழியர்கள் விளையாடுவதற்கென கரபந்தாட்ட ஆடுகளம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆடுகளத்தில் முதன் முதலாக வைத்தியசாலை ஊழியர்களுக்கும், புற்றளை இளைஞர் கழகத்துக்கும் இடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் புற்றளை இளைஞர் கழகஅணி வெற்றி பெற்றது. (ஐ-173)

## நீர்த்தாங்கி அமைப்பு

யாழ். மாநகர சபை, பொதுமக்களின் குடிதண்ணீர் வசதி கருதி செட்டித்தெருவில் இரண்டு நீர்த்தாங்கிகளை அமைத்துள்ளது.

பொதுமக்களின் குடிதண்ணீர் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் வகையில் செட்டித் தெருவில் குடிதண்ணீர் தொட்டிகளை நிறுவுமாறு நல்லூர் முருகன் சனசமூக நிலையம் யாழ். மாநகர சபையைக் கேட்டிருந்தது. (ஐ-103)

# தபால்களில் பணம், காசோலை அனுப்புவது சட்டவிரோதமானது

## தபால் மா அதிபர் அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 6

வெளிநாட்டுத் தபால்களுக்குள் பணம், காசோலை என்பனவற்றை வைத்து அனுப்புவது சட்ட விரோதமானது என்று தபால்மா அதிபர் எம். எச். எஸ். ஜெயசிறி தெரிவித்தார்.

காசோலைகளை சாதாரண தபால்களில் வைத்து அனுப்புவதைத் தவிர்க்கும்படியும் அவற்றைப் பதிவுத் தபால்களில்வைத்து அனுப்புமாறும் பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளிலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் வாழும் இலங்கை மக்கள் கரன்ஸி நோட்டுக்களையும்காசோலைகளையும் சாதாரண தபால்களில் வைத்து அனுப்புவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அவ்வாறு தபால்களில் வைத்து அனுப்பப்படும் கரன்ஸிகள், காசோலைகள் களவு போகும் சந்தர்ப்பங்கள் பெருமளவில் உள்ளன. கொழும்பு மத்திய தபாலகத்தில் 6 தபால் பொதிகள் களவாக உடைக்கப்பட்டு அதிலிருந்து தபால்கள் திருடப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இதற்கு தபால்த்திணைக்கள ஊழியர்களும் சம்பந்தப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இது தொடர்பாகப் பலர் பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-9)

# கடை விற்பனை

யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும்
**இல. 51, கே. கே. எஸ் வீதியில் உள்ள கடை**
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**திருமதி க. இரத்தினநாயகி**
**187 / 31 ஆஸ்பத்திரி வீதி,**
யூனியன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(74213)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## திருமதி கனகம்மா கந்தையா

தோற்றம்; 18-11-1927 மறைவு: 05-02-2000

06-03-2000

எம்மை எல்லாம் நல்வழிப்படுத்திய அம்மாவே
அன்பு நிறைந்த அம்மாவே
வாழ்ந்து மறைந்த எம் அம்மாவின்
பிரிவில் 31 நாள்கள் கடந்து விட்டன.
அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

05-02-2000அன்று (சனிக்கிழமை) இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி கனகம்மா கந்தையா அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைத் தொடர்பு, தபால் மூலம் அனுதாபம் கூறியவர்களுக்கும், சகல உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (06-03-2000) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

'சுபம்'

**பிள்ளைகள், சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைக .**

''ஆனந்தவாசம்''
இணுவில் மேற்கு, இணுவில்.

(74170)

# பீஹார் முழுவதும் நேற்று ஹர்த்தால்!

## புதிய அரசு நாளை பதவியேற்பு

புதுடில்லி, மார்ச் 6

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை புதிய அரசு அமைக்க ஆளுநர் பி. சி. பாண்டே அழைப்பு விடுத்ததுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மாநிலம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

லாலு பிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்ட்டிரிய ஜனதாதள் கட்சி இந்தக் ஹர்த்தாலுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ஹர்த்தாலினால் மாநிலத்தின் இயல்பு நிலை படுமோசமாகப் பாதிக்கப்பட்டது.

பாடசாலைகள், அரச அலுவலகங்கள், கடைகள் என்பன முடப்பட்டிருந்தன. போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பித்திருந்தன. ரயில் பாதைகளின் குறுக்கே ராஷ்ட்டிரிய ஜனதாதள் தொண்டர்கள் நின்று ரயில் போக்குவரத்துகள் அனைத்தையும் நிறுத்தி விட்டனர்.

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக மாநிலம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. துணை இராணுவப் படையினர் மேலதிக பாதுகாப்புக்காகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்களில் ராஷ்ட்டிரிய ஜனதாதளம் தனிப் பெரும் கட்சியாக வந்திருந்தது. எனினும் ஆட்சி அமைப்பதற்கு இரண்டாவது இடத்தில் இருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆளுநர் கடந்த வெள்ளியன்று அழைப்பு விடுத்தார். பத்து நாள்களுக்குள் புதிய அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

தேர்தல் முடிவுகளின்படி ராஷ்ட்டிரிய ஜனதாதள் 123 ஆசனங்களையும் தேசிய ஜனநாயகக் கூட்டணி 122 ஆசனங்களையும் காங்கிரஸ் 23 ஆசனங்களையும் சுயேச்சைகளும் ஏனைய கட்சிகளும் எஞ்சிய ஆசனங்களையும் கைப்பற்றி இருந்தன.

சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க 163 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஆளுநர் அளித்த காலக்கெடுவுக்குள் தமது கூட்டணி பெரும்பான்மையை நிரூபிக்கும் என்று தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் முதலமைச்சராக உள்ள நித்தீஸ்குமார் தெரிவித்தார்.

புதிய அரசு நாளை பதவியேற்கும் என்றும் பதவியேற்ற ஒரிரு தினங்களில் நம்பிக்கை வாக்கெடுப்பை நித்தீஸ்குமார் நாடுவார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ-6-5)

உலக அரங்கில்

## அ.தி.மு கவுடனான கூட்டு அடுத்த தேர்தல் வரையும் தொடரும்

### மூப்பனார் சூசகமாகத் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 6

அ. தி. மு. க வுடன் தற்போது தொடர்ந்து வரும் உறவுகள் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மாநில சட்டமன்றத் தேர்தல்கள் வரை தொடரும் என்று த. மா. கா தலைவர் க. மூப்பனார் தெரிவித்துள்ளதாகத் தமிழகச் செய்திகள் கூறுகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மூப்பனார் சூசகமாக இதனைத் தெரிவித்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

அண்மையில் நடந்து முடிந்த இடைத் தேர்தல் முடிவுகளைக் கொண்டு அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை எதிர்வு கூற முடியாது 1966 ஆம் ஆண்டு இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் அடுத்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அது படு தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது — என்றும் மூப்பனார் அங்கு கூறியுள்ளார்.

(ஐ-6-5)

## வெளிநாட்டுத் தொழிலாளர் வரவை அதிகரிக்க ஆஸ்திரேலியா முடிவு

மெல்பேர்ண், மார்ச் 6

வெளிநாடுகளில் இருந்து தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை நாட்டிற்குள் வரவழைப்பது குறித்து ஆஸ்திரேலிய அரசு ஆராய்ந்து வருகிறது.

நாட்டில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை அடுத்து இந்தத் திட்டம் குறித்து ஆராய்வதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆஸ்திரேலியாவில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் சேவையில் சுமார் 50 சதவீதம் வெளிநாடுகளில் இருந்துவருபவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய 50 சதவீதம் குடும்பங்கள், அகதிகள் ஆகியோரை ஒன்று படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிவரவுக் கொள்கைகள் தொடர்பாக விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபின் தொழிலாளர்களை நாட்டுக்குள் உள்வாங்குவது தொடர்பான விடயங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளன.

ஆஸ்திரேலிய வர்த்தககைத்தொழில் சபை வருடம் ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மேல் நாட்டுக்குள் நுழைய அனுமதி அளிக்கப்பட்டாலேயே போதிய தொழிலாளர்கள் கிடைப்பார்கள் என்று கூறியுள்ளது.

தற்போது வருடம் ஒன்றுக்கு 80 ஆயிரம் பேர் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களில் ஆசிய நாட்டவர்களே அதிகளவில் ஆஸ்திரேலியா சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அதே சமயம் ஆஸ்திரேலியாவில் உள்ள நீண்ட கடற்கரைகளைப் பயன்படுத்திச் சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைபவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

(ஐ-6-5)

# 3 நூற்றாண்டுகளில் வாழ்ந்து பிரிட்டிஷ் பெண் சாதனை!

## கின்னஸிலும் இடம் பிடிப்பு

லண்டன், மார்ச் 6

உலகிலேயே அதிகூடிய வயதுடையவர் இங்கிலாந்தைச் சேர்ந்த 115 வயதான பெண் ஒருவரே என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பெயர் பதியப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் ஷர்போ ஷயரில் உள்ள அண்டனாவ் நகரில் வசிக்கும் இவாமேரிஸ் என்ற பெண்மணியே உலகில் அதிக வருடம்வரை வாழ்ந்தவர் என்று கின்னஸ் குழு அறிவித்துள்ளது.

1885 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி பிறந்த இவர் மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஒரே நபர் என்ற பெருமையையும் பெறுகிறார்.

தற்போதும் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வரும் இவாமேரிஸ் அயராத உழைப்பாளி. அவித்த வெங்காயம் அவரது முக்கிய உணவுகளில் ஒன்று. இவர் தனது இருதய நோய் தவிர வேறு எந்தவித நோயாலும் தாக்கப்படவில்லை என்று அவரது நண்பி ஒருவர் கூறினார். இருதயநோய் கூட அவரது வயது காரணமாகவே அவருக்கு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகில் அதிககாலம் உயிர் வாழ்ந்ததாக கின்னஸில் பதிவு செய்யப்படுவதற்காக மேற்கிந்தியப் பெண் ஒருவர் தனக்கு 125 வயது என அறிவித்திருந்தார். எனினும் அவரது வயதை நிரூபிப்பதற்கு போதிய சான்றுகள் இல்லாமையால் கின்னஸ் குழு அவரது விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டு இவாமேரிஸை அதிக வயதுடையவர் என்று அறிவித்துள்ளது.

(ஐ-6-5)

## செச்சினியப் போர் இன்னும் ஓயவில்லை

### தீவிரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா புதிய தாக்குதல்கள்

குறோஸ்னி, மார்ச் 6

செச்சினியத் தீவிரவாதிகள் தற்போது பதுங்கி உள்ளதாகக் கருதப்படும் அர்குன் பள்ளத்தாக்குப் பகுதியில் அமைந்துள்ள தீவிரவாதிகளின் நிலைகள் மீது ரஷ்யப் படையினர் புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 ரஷ்யப் படையினர் உயிரிழந்ததை அடுத்து இந்தப் புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள தீவிரவாதிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்களும் இடைவிடாத ஆட்லறித் தாக்குதல்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அர்குன் பள்ளத்தாக்கில் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரையான தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக ரஷ்யப் படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-6-5)

## சீன - இந்திய மாநாடு

பெய்ஜிங், மார்ச் 6

பாதுகாப்புத் தொடர்பான சீன— இந்திய மாநாடு இன்று சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஆரம்பமாக உள்ளது.

இந்த மாநாட்டின் போது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தற்போதைய உறவு நிலை குறித்து இந்தியா சீனாவுக்கு எடுத்துக் கூறும் என்று புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சர்வதேச மற்றும் பிராந்தியப் பாதுகாப்புத் தொடர்பாக இந்த மாநாட்டில் இரு நாடுகளும் தீவிரமாக ஆராயவுள்ளன

(ஐ-6-5)

## மீட்புப்பணியில் மேலும் ஹெலிகள்

மொபுட்டு, மார்ச் 6

மொஸாம்பிக்கில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக சர்வதேச சமூகம் உதவிப் பொருள்களையும் மீட்புப்படையினரையும் அனுப்பி வைத்துள்ளது.

அங்கு தற்போது மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் தென்னாபிரிக்கப் படையினருக்கு உதவியாக பிரான்ஸ் உட்பட மேலும் பல நாடுகள் தமது மீட்புப் பணியாளர்களையும் ஹெலிகளையும் அனுப்பி வைத்துள்ளன.

50 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரும் இயற்கை அனர்த்தமாக இந்த வெள்ளப்பெருக்கு கருதப்படுகிறது. இதுவரை 10 லட்சம் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ 6)

## அம்பாறையில் சிங்கள விவசாயி மரத்தில் ஏறி உண்ணாவிரதம்

### நெல்லுக்கு உத்தரவாத விலை கோரி

கொழும்பு, மார்ச் 6

விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யக்கோரி அம்பாறை மாவட்ட விவசாயி ஒருவர் 40 அடி உயர மரம் ஒன்றில் ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

தனசேன வன்னியாராச்சி (வயது 40) என்னும் விவசாயியே இப்போராட்டத்தில் குதித்துள்ளார்.

அம்பாறையில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட நெல் கொள்வனவு இன்றி தேங்கி வருவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகளிடம் இருந்து உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடப் போவதாக அந்த விவசாயி கூறியுள்ளார்.

பிந்திக்கிடைத்த தகவலின் படி தனது போராட்டத்தை அவர் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-184)

## பிரவேச பண்டிதர் வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்படும் பால பண்டிதர் பரீட்சை இம்மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ளது என சங்க வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இதேவேளை சங்கத்தினால் நடத்தப்படும் பிரவேச பண்டிதர் வகுப்புகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன என்றும் ஒவ்வொரு வார இறுதியிலும் நடைபெறும் இவ் வகுப்புக்குச் சம்பந்தப்பட்டோர் தவறாது சமூகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

(அ-15)

## அமைச்சுப் பதவி கேட்கும் வேடுவத் தலைவர்!

கொழும்பு, மார்ச் 6

இலங்கையில் வாழும் பழங்குடி மக்களுக்காக தனியான அமைச்சு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் அந்த அமைச்சர் பதவி வேடுவ சமூகத்தவர் ஒருவருக்கு வழங்கப்படவேண்டும் எனவும் வேடுவர் தலைவர் ஊரிவரிகே வன்னியார் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்குடி இன மக்கள் வசிக்கின்றனர்.

பல்வேறுபட்ட சமூகங்களையும் சேர்ந்த பழங்குடிகளை ஒன்று கூட்டி ஆலோசனை பெற்றே இந்த அமைச்சு ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் வேடுவத் தலைவர் கேட்டிருக்கிறார்.

பழங்குடி மக்களின் சமூகப் பாதுகாப்புக்கும் அவர்களின் உரிமைகளைக் கட்டிக்காக்கவும் அவர்களது எதிர்காலப் பரம்பரையினர் தங்கள் சமூகங்களை விட்டு வெளியேறாது பாதுகாக்கவும் இந்த அமைச்சு அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-164)

# உலக வங்கி விவசாயத் திட்டத்தை புலிகள் பகுதியிலும் ஆரம்பிக்க அனுமதி

## 24 ஆம் திகதி அங்குரார்ப்பணம்

கொழும்பு, மார்ச் 6

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப் படவுள்ள நீர்ப்பாசன விவசாயத் திட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட உள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலும் இத் திட்டத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் என்று மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று கொழும்பில் நடைபெற்ற மாகாண பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் ஆளுநர் இதைத் தெரிவித்தார். இத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத இடங்களிலும் இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக மாகாணசபையின் பிரதிச் செயலாளர் ஜி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை —

ஊவா மாகாணத்தில் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்காக வடக்கு—கிழக்கில் உள்ள பட்டதாரிகளின் விவரங்களைத் தந்துதவுமாறு மாகாணக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் கேட்டிருந்தார். அதற்கிணங்க அங்கு ஆசிரியராக நியமனம் பெற விரும்பும் பட்டதாரிகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் உத்தரவிட்டார்.

(ஐ-164)

# மின்சாரம், தொலைபேசி கட்டணங்கள் உயரும்!

கொழும்பு, மார்ச் 6

சமையல் எரிவாயு, டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட உள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

மின்கட்டணம் பத்து சதவீதத்தாலும் தொலைபேசிக் கட்டணங்கள் 20 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட உள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் டாக்டர் பி. பி. ஜெயசுந்தர தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பாலும், சேவை விஸ்தரிப்பாலும் மின்சாரசபை இக்கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்கு சர்வதேச சேவையால் ஏற்படும் பெருமளவு நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக அது தனது கட்டணத்தை 20 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளதாகவும் டாக்டர் ஜெயசுந்தர தெரிவித்தார்.

இதேவேளை, டீசல் விலை அதிகரிப்பையடுத்து வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணும் பெரிதும் அதிகரித்துள்ளது.

அத்துடன் 20 சதவீத டீசல் விலை அதிகரிப்பை காரணம் காட்டி வர்த்தகர்கள் பல்வேறு பொருள்களினதும் விலையை 50 முதல் 75 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-164)

## தேர்த் தரிப்பிடம் அமைப்பு

சாவகச்சேரி, மார்ச் 6

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் பிள்ளையார் கோயில் தேர்த் தரிப்பிட கட்டட வேலைகள் சுமார் 8 லட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருகிறது. (ஐ.31)

# நேர்த்தியாகத் தலைமை வகிக்கும் ஆளுமை பெண்களிடம் வளர்கிறது

## மகளிர் இல்ல விழாவில் உரை

நல்லூர், மார்ச் 6

பெண்கள் தலைமைத்துவம் வகிக்க முடியுமா என்று ஒரு காலத்தில் விலைப்பட்டது. இன்று பலகல்லூரிகளின் அதிபர்களாகப் பெண்கள் பணிபுரிகின்றனர். அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற அதிபர்கள் மாநாட்டில் 40 வயது நிரம்பிய பெண்மணியே எம்மை வழி நடத்தினார். இன்று நேர்த்தியாக நீதியாகத் தலைமை வகிக்கும் ஆளுமை பெண் சமூகத்திடம் நிறைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கிருபா வீரசிங்கம் தெரிவித்தார்.

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 18 ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றது.

செல்வி கிருபா வீரசிங்கம் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

இந்த நாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இந்துப் பெண்கள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அரவணைப்பில் வாழும் மகளிர் இல்லப் பிள்ளைகள் சமயத்திலும் கல்வியிலும் முன்னணியில் இருக்கிறார்கள். இந்தப் பிள்ளைகளின் திறமைகளை முழு உலகமும் இன்று அறிந்துள்ளது.

அன்னமிடுவதுடன் அறிவூட்டி ஆதரவற்ற சமூகத்தைத் தலைநிமிர வைத்துள்ள துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்மாதிரியைச் சைவ உலகம் பின்பற்றவேண்டும். மகளிர் இல்லம்18 ஆவது நிறைவைக் கொண்டாடுவது இந்துப் பெண்களுக்குப் பெருமை தரும் விடயமாகும் — என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது தலைமையுரையில் கூறியதாவது:

18 ஆண்டுகள் எமது மகளிர் இல்லம் சிறப்பாக இயங்கி வருவதற்கு அம்பாளின் திருவருளும் பொதுமக்களின் ஆதரவும் எமது நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புமே காரணம். எமது இல்லத்தில் ஐநூற்றுக்கும் அதிகமான பெண் பிள்ளைகள் வாழ்ந்து வெளியேறி வேலை வாய்ப்புக்களிலும் இல்லற வாழ்விலும் இணைந்து கொண்டுள்ளனர். பல்கலைக்கழகக் கல்வி வரை பெற்றுச் சமூகத்தில் உயர் நிலையில் இங்குள்ள அனைத்துப் பிள்ளைகளும் வாழவேண்டும் என்ற எங்களின் குறிக்கோள் இந்தக் குழந்தைகளால் நிறைவேறும் என்ற மன உறுதி எமக்கு உண்டு—என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தமது அருளுரையில் கூறியதாவது:

குழந்தைகளை அரவணைக்கும் இல்லமாக மட்டுமன்றி எமது சமயத்தின் இல்லமாகவும் ஒரு நல்ல தலைமையில் 18 ஆண்டுகள் நிறைவான பணியாற்றி வரும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் கொண்டாடும் இந்த விழா எமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. வெளிநாட்டில் உள்ளவர்கள் இது பற்றிச் சிந்திக்கிறார்கள். எமது சமயம் கேலிக்கூத்து, வேடிக்கை வாழ்வு முறை என்று இருக்கும் காலத்தில் இவர்களுடைய சமய நெறிகள் எமக்கு ஒரு முன் மாதிரியாகும்.

அம்மா நல்ல ஆளுமையுடையவர். பிள்ளைகளின் கல்விச் சிறப்பு ஒழுக்க நெறிகள் போற்றத்தக்கது, எமது சமயத்தைச் சார்ந்த நிறுவனங்கள் பல இருக்கின்றன. இவர்களது ஒழுங்கு முறைகள் பற்றி நான் அவற்றுடன் உரையாடுவதுண்டு. ஏனைய மதத்தில் உள்ள கட்டுக்கோப்பு நம்மிடம் இல்லை என்று சொல்லிச் சொல்லியே எமது சமயத்தைச் சிதைத்துக் கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் எங்களைக் கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக சமயத்தில் கட்டுப்பாடுகள் இல்லை என்று சொல்லுகிறோம். இது தவறு — என்றார்.

முன்னாள் நீதிபதி மு. திருநாவுக்கரசு பேசும் போது கூறியதாவது:-

சோகமான கட்டத்தில் நாடு போய்க் கொண்டிருக்கிறது. இந் நிலையில் சிந்திக்கத் தெரிந்த அம்மையார் இப்படி வாழ்ந்ததால்தூர்ந்து கிடந்த துர்க்கை அம்மன் ஆலயத்தை புனரமைத்தும் மகளிர் இல்லத்தின் மூலம் வசதியற்ற ஆதரவற்றவர்களுக்கு வாழ்வளித்தும் பல்வேறு நற்பணிகளை ஆற்ற முடிந்தது. நீங்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. இந்த நாட்டுக்கு முன்னுதாரணமாக வாழும் அவர்கள் நீடுழி வாழ வேண்டும் — என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினார்கள். மகளிர் இல்ல மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

போட்டிகளில் கலந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(ஐ-103)

# விளையாட்டரங்கு

# புதிய சாதனை புரிந்த மானிப்பாய் பரிஷ் அணி

யாழ்ப்பாணம், மார்ச் 6

'மணிவதனன்' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி நேற்று முன்தினம் இடம்பெற்ற முதல்சுற்று ஆட்டத்தில் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி விக்ரம் விளையாட்டுக்கழக அணியுடனான ஆட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட 15 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 200 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் இந்தச் சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

ஒன்பது வீரர்கள் பங்குபற்றும் 15ஓவர்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்துஆடிய பரிஷ் அணி 200 ஓட்டங்களைக் குவித்தது. நரேஷ் 70 ஓட்டங்களையும் றொஸ்ரன் 43 ஓட்டங்களையும் விளாசினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய விக்ரம் விளையாட்டுக் கழக அணி 11 ஆவது ஓவரில் 38 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஜெயரூபன் 3 விக்கெட்டுக்களையும் சுபாஸ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (ஐ-8)

## 19 வயது கிரிக்கெட்

# நான்கு ஆட்டங்களில் இரண்டில் மானிப்பாய் இந்து அணி வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 6

பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக்கும் இடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. சிவாஸ்கர் 60 ஓட்டங்களையும் தற்பரன் 27 ஓட்டங்களையும் கோபிதாஸன் 28 ஓட்டங்களையும் அடித்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 113 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சகல துறை ஆட்டக்காரர் சாத்வீகன் 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

தொடர்ந்து ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. பிரதீப் 40 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த ஆட்டத்தை வென்றதன் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இந்தக் கிரிக்கெட் பருவ காலத்தில் விளையாடிய 4 போட்டிகளில் இரண்டில் வெற்றியும் இரண்டில் தோல்வியும் அடைந்துள்ளது. (ஐ-8)

## கிரிக்கெட்

'மணிவதனன்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் 9 பேர் பங்கு பற்றும் 15 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3 மணி — வில்ஸ் வி. க. எதிர் ஸில்வர் ஸ்டார் வி. க.

சென்றல் வி. க. எதிர் நல்லூர் ஐக்கிய (மஞ்சள்) வி. க.

★ மாலை 4.30 மணி — பியோ வி. க. எதிர் வேல் முருகன் வி. க.

★ விக்ட்றி புளூஸ் வி. க. எதிர் நல்லூர் தெற்கு ச. ச. வி. க.

(ஐ – 8)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

கோப்பாய் கல்விக்கோட்ட மட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு

★ அச்செழு சைவப்பிரகாச வித்தி. எதிர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

★ சரவணபவானந்தா வித்தி. எதிர் அத்தியார் இ.க.

### 17 வயதுப் பிரிவு

★ நடராஜ இராமலிங்க வித்தி. எதிர் உரும்பிராய் இ. க.

★ அச்செழு சைவப்பிரகாச வித்தி. எதிர் சரவண பவானந்தா வித்தி.

★ புனித திரேசா மகளிர் கல்லூரி, எதிர் சோமஸ்கந்தா கல்லூரி.

### 19 வயதுப் பிரிவு

★ அச்சுவேலி ம. வி. எதிர் உரும்பிராய் இ. க.

(ஐ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் இன்று இடம்பெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 17 வயதுப் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியுடன் திருக்குடும்பக்கன்னியர்மட வித்தியாலய அணியும் —

15 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியுடன் திருக்குடும்பக்கன்னியர் மடவித்தியாலய அணியும் —

19 வயதுப் பிரிவினருக்கான அரை இறுதி ஆட்டத்தில் திருக்குடும்பக் கன்னியர் மட வித்தியாலய அணியுடன் வேம்படி மகளிர் கல்லூரி அணியும் மோதுகின்றன.

(ஐ-8)

## உதயன்

### வந்து விழுகிறது முதலாவது தடைக் கல்!

இலங்கை இனப்பிரச்சினை ஓர் உள் நாட்டு விவகாரம். அதில் வெளிநாடு ஒன்றின் தலையீடு தேவை இல்லை

பௌத்த மத பீடங்களின் தலைவர்களின் மாநாடு ஒன்றில் இவ்வாறு தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது. இனப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக நோர்வே அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியையும் பௌத்த மதத் தலைவர்கள்கண்டித்துள்ளனர்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகள் நடைபெறும் போதெல்லாம் பௌத்த மத பீடங்கள் எப்போதுமே தடைக் கற்களாக வந்து குந்திக் கொள்வது இந்த நாட்டின் வரலாறாகிவிட்டது.

தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகள் வழங் கப்படக்கூடாது என்பதில் பௌத்த மத குருமார்கள் எப்போதுமே 'கண்ணாக' உள் ளார்கள். இலங்கை பல இன, பல மத மக்கள் வாழும் நாடு என்பதனை அவர்கள் காண மறுக்கிறார்கள்

இந்த நாடு சிங்கள பௌத்த தேசம் என்ற தீவிரவாதப் போக்கைக் கைவிடத்தாம் இன் னும் தயாராக இல்லை என் பதனையே அவர்கள் மீண் டும் இப்போது சமிக்ஞை காட்டி யுள்ளார்கள்.

வேறு, எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு, தென்னி லங்கைஅரசியலில்பௌத்தமத பீடங்களின் செல்வாக்கும் ''ஆதிக்கமும்'' அதிகமாக உள்ளன. அதனால் அரசியல் வாதிகள் பௌத்த மத குரு மார்களை மீறி, விஞ்சி எது வும் செய்யமுடியாத நிலைக் குக் கட்டுண்டு உள்ளார்கள்.

அரசியல்வாதிகள், பௌத்த மதகுருமாரின் அடைப்புகளுச் குள் கட்டப்படும் நிலை இன்று நேற்று உண்டானதல்ல. ஐம்பதுகளிலேயே அது வெளிப் படத் தொடங்கிவிட்டது. அத னாலேயே தந்தை செல்வா வுடன் பேச்சு நடத்திய அப் போதையபிரதமர்எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக் கும்அந்தநிலையேஉண்டானது.

இத்தனை ஆண்டுகள்கழிந்த பின்னரும், தென்னிலங்கை யின் அரசியல் தலைவர்கள் பௌத்தமத பீடங்களுக்குக் கட்டுண்டு கிடக்கும் நிலை மாற வில்லை, அதனை நன்றாகத் தெரிந்து கொண்டே, புதிய நூற்றாண்டின் முதலாவது சமாதான முயற்சியையும் முறி யடிக்க பௌத்த குருமார் கிளம்பி உள்ளனர்.

இனப்பிரச்சினை உள்விவ காரம் என்ற நிலையைத் தாண்டி வெளியார் உதவி யுடனேயே தீர்க்கப்பட வேண் டிய ஒன்று என்ற நிலையை அடைந்திருப்பதே யதார்த்தம். இந்த நாட்டின் தேசிய இனங் களில் ஒன்று ஒடுக்கப்படுவது மட்டுமன்றி ஒழிக்கப்பட்டும் வரும்போது அதற்கு உள்விவ காரம் என்று முலாம் பூச முடி யாது. இது பௌத்த குருமா ருக்குத் தெரியாதிருக்க நியாய மில்லை.

எனினும்—வெளியார் அனுச ரணையுடன் தீர்வுமுயற்சி மேற் கொள்ளப்படும் போது சம்பந் தப்பட்ட உள்நாட்டுத் தரப்புகள் இரண்டும் ஒன்றின் மீது மற் றையதுஎதனையும்திணிக்கஇய லாது. நோர்வே அனுசரணை யாளராக இருக்கும்போது சில சலுகைகளை மட்டும் தீர் வாகக் காட்டித் தமிழர் தரப்பு மீது அதனை அரசு திணிக்க முடியாத நிலை உருவாகும். அது குறித்து கவலையும் அச் சமும் பௌத்த குருமாருக்கு உண்டாகியுள்ளன. அதனா லேயே வழமைபோலத் தடைக் கல்லாக வந்து விழுவதற்குப் புறப்பட்டுள்ளார்கள்.

இந்த முதலாவது தடைக் கல்லை எடுத்து வீசும் திறமை யும் துணிவும் சந்திரிகாவுக்கு வருமா?.

# முல்லைத்தீவில் 2 மாதங்களில் மேலும் 10 ஆயிரம் பேரின் நிவாரணம் வெட்டு

வவுனியா, மார்ச் 6

வன்னிப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு அர சாங்கம் வழங்கிவந்த நிவா ரணத்தில் மீண்டும் பாரிய வெட்டு மேற்கொள்ளப்பட்டி ருப்பது தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத் தில் நிவாரணத்தைப் பெற்று வந்த குடும்பங்களில் கடந்த இரண்டுமாத கால இடை வெளிக்குள் அடுத்தடுத்து பத் தாயிரம் குடும்பங்களுக்கான நிவாரணத்தை அரசாங்கம் வெட்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத் தில் 35 ஆயிரம் குடும்பங்கள் நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவை. இதில் அர சாங்கம் முன்னர் வெட்டினை மேற்கொண்டு கடந்த ஆண்டு இறுதி வரைக்கும் 24 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கி வந்துள்ளது.

இதன் பின்னர் இந்த வருட ஆரம்பத்திலும் கடந்த பெப் ரவரி மாதத்திலும் இரண்டு தடவைகள் நிவாரண வெட் டினை அரசாங்கம் மேற் கொண்டு மொத்தம் இரண்டு மாதஇடைவெளிக்குள் இடம் பெயர்ந்த 10 ஆயிரம் குடும் பங்களுக்கானநிவாரணத்தை வெட்டியுள்ளது.

இதன் அடிப்படையில் தற் போது 14 ஆயிரம் குடும் பங்களுக்கு நிவாரணம் வழங்க அரசு அனுமதி வழங் கியுள்ளது.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச அதி காரிகள் நிவாரணத்தை வழங்குவதில் பெரும் நெருக் கடிகளை எதிர்நோக்கி வரு வதாகவும் அறிய வந்துள் ளது.

அரசாங்கம் மேற்கொண் டுள்ள இடம் பெயர்ந்த மக் களுக்கான நிவாரண வெட் டினால் இடம் பெயர்ந்த குடும்பங்கள் பெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளன. (-ஐ-164)

## வேலிக் கிடுகுகள், பற்றைகள் எருவில் வீதியில் அகற்றல்

மட்டக்களப்பு, மார்ச் 6

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடிப் பிரதேசத்தில் உள்ள எருவில் — குருமண் வெளிப் பிரதான வீதியிலுள்ள வேலிக் கிடுகுகள் மற்றும் வீதியின் இரு மருங்கிலுமுள்ள பற்றை கள், மரங்களை அகற்றுமாறு விசேட அதிரடிப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி இந்த வீதியில் கிளைமோர் குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத் தைத் தொடர்ந்தே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

இந்த உத்தரவை அடுத்து பொதுமக்கள் தத்தம் வீட்டு வேலிக்கிடுகுகளை அகற்றி வீட்டுக்கு முன்பாகவுள்ள பற் றைகள் மற்றும் மரங்களை வெட்டித் துப்புரவாக்கும் பணிகளை மேற்கொண்ட னர்.

இதே வேளை —

எருவில் பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கை களைத் தீவிரப்படுத்தியுள்ள துடன் இரவு ஏழு மணிக்குப் பின்னர் பொது மக்களை நட மாட வேண்டாம் என்றும் —

அத்தியாவசியத் தேவை களுக்காக நடமாட வேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில் 'ஹரிக்கேன்' லாம்புடன் நட மாடுமாறும் பணிப்புரை விடுத்துள்ளனர்.

விசேட அதிரடிப் படையி னரின் கட்டுப்பாட்டுப் பிர தேசத்தில் பொதுமக்கள் 'ரோச் லைற்' பாவிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-க-164)

## நோயினால் புகையிலைச் செய்கை பாதிப்பு

பருத்தித்துறை, புலோலி, வியாபாரி மூலை ஆகிய பகுதி களில் விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்ட புகையிலைக் கன்றுகளில் குருமன் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப் புகையிலைக் கன்றுகள் வளர்ச்சிகுன்றிக் காணப்படு கின்றன. சில விவசாயிகள் இத்தகைய புகையிலைக் கன்றுகளை அழித்து விட்டு இப்பகுதிகளில் புதிய கன்று களை நடுகை செய்து வரு கின்றனர்.

மேலும் இந்த நோய்த் தாக்கத்தினால் விவசாயிகள் பெரும் நட்டம் அடைந்துள் ளனர். தற்போதைய கால நிலையே மேற்படி நோய்த் தாக்கத்திற்குக்காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்ற னர். (ஐ-30)

# வயம்ப பல்கலைக்கழக நவீன கற்கைகள் மூலம் தமிழ் மாணவருக்குப் பல உயர்கல்வி வாய்ப்புக்கள்

கடந்த காலங்களில் பொதுவாக எமது நாட்டி லுள்ள பல்கலைக்கழகங்கள் பாரம்பரியமான கற்கைநெறி களையே கற்பித்து வருகின் றன. ஆனால் இக்கற்கை நெறிகள் தொழிற்தேவை களைப் போதியளவில் பூர்த்தி செய்வதில்லை. இதனால் பட்டம் பெற்ற பல மாணவர் கள் தொழில் பெறுவதில் மிகவும் சிரமமான ஒரு நிலையை எதிர்கொள்கின்ற னர். காலத்தின் தேவையை உணர்ந்து தற்போது சில பல்கலைக்கழகங்கள் தொழில் வாய்ப்பைத் தரக்கூடிய பல புதிய கற்கைநெறிகளை அறி முகப்படுத்தி வருகின்றன. அந்த வகையில் எமது வயம்ப பல்கலைக்கழகமும் பல புதிய கற்கை நெறிகளை அறிமுகப் படுத்தி வருகின்றது. ஆனால் எமது யாழ். மாணவர்கள் இக் கற்கை நெறிகள் பற்றிய போதிய விளக்கமின்மையா லும் இப்பல்கலைக்கழகத்தின் அமைவு, பாதுகாப்பு, சூழ் நிலை தொடர்பான குழப்ப மான மனநிலையாலும் எமது பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தவறுகின்றனர். இப்படியான மாணவர் மனதில் உள்ள சஞ் சலங்களை நீக்கி, போதிய விளக்கத்தை எமது கல்விசார் சமூகத்திற்கு வழங்குவதன் மூலம் எமது பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்கு மாணவர் கள் விண்ணப்பிப்பதை ஊக்கு விப்பதற்கான சிரேஷ்ட மாண வர்கள் என்ற முறையில் நாம் இப்பத்திரிகை மூலம் விழைகிறோம்.

எமதுபல்கலைக்கழகமானது ஆரம்ப காலத்தில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக இருந்து தற்போது தனிப் பல்கலைக்கழகமாகச் செயற்படுகிறது. எமது பல் கலைக்கழகம் 4 பீடங்களைக் கொண்டது. அவையாவன: முகாமைக் கற்கை நெறிகள், விவசாயம், உணவும் ஊட்ட மும், பிரயோக விஞ்ஞானம் (Phy. Sc.)

### பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் [Faculty of App. Sc.]

இப் பீடத்தில் Industrial Management, Electronics, Maths and Maths Modelling, Statistic, Computer Studies ஆகிய பாடச்சேர்க் கைகளுக்கான B. Sc. பட்டம் வழங்கப்படுகிறது. இதில் Industrial Management பாடச்சேர்க்கை மாணவர் களுக்கு பிரபல தொழில் நிறு வனங்களில் தொழிற் பயிற்சி யும் வழங்கப்படுகிறது.

### உணவும் ஊட்டமும் [Facuity of Food & Nutrition]

இதன் கீழ் 4 வருட கற்கை நெறியான B. Sc. [Food & Nutrition] நடைபெறுகின் றது. அத்துடன் இது தொழிற் பயிற்சியையும் உள்ளடக்கி யுள்ளது.

### முகாமைத்துவ பீடம் [Faculty of Management]

இப்பீடத்தினால் 4 பட்டங் கள் வழங்கப்படுகின்றன. அவையாவன B. Sc. (கணக் கீடும்வியாபாரநிதியும்), B. Sc. (வங்கியும் நிதியும்) B. Sc. (வியாபார முகாமை), B. Sc. (காப்புறுதியும் மதிப்பீடும்)

### விவசாயபீடம் [Faculty ofAgriculture]

இப்பீடத்தினால் 4 வருட கற்கை நெறியான B. Sc. [Agriculture] வழங்கப்படு கின்றது. இப்பீடம் எமது வயம்ப பல்கலைக்கழகத்தில் இருந்து 10km தூரத்திலிருக் கும் மாகந்துர எனுமிடத்தில் அமைந்துள்ளது.

எமது பல்கலைக்கழத்தி லுள்ள அனைத்துக் கற்கை நநறிகளும் முழுமையாக ஆங் கிலத்தில் நடைபெறுகின்றன. இப்பல்கலைக் கழகம் குரு நாகல் மாவட்டத்திலுள்ள குளியாபிட்டிய எனும் நகரத் தில் உள்ளது. இது கொழும்பு– நீர்கொழும்பு வீதியூடு அண் ணளவாக 84 கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. கொழும்பு நகரத்திலிருந்து எந்நேரமும் இருமணி நேரத்திற்குள் இல குவில் பயணம் செய்யும் வச தியை இவ்விடம் கொண்டுள் ளது. அத்துடன் இப்பிர தேசத்தில் கணிசமான அளவு தமிழர்களும் வாழ்ந்து வரு கின்றனர். அத்துடன் இப்பிர தேசத்தில் மாணவர்கள் வதி விடங்கள் பெறுவதற்குச் சிர மங்கள் கிடையாது. பாது காப்புப் பிரச்சினையும் புறக் கணிக்கத்தக்கதாக உள்ளது. எனவே மாணவர்கள் எதுவித மனக்கிலேசமுமின்றி எமது பல்கலைக்கழகத்திற்கு விண் ணப்பிக்க வேண்டுகிறோம். இதன் மூலம் எமது மாண வர்களுக்கான பல்கலைக்கழக வாய்ப்பு விரயமின்றி பயன் படுத்த வழிகோலப்படும்.

*சிரேஷ்ட மாணவர்கள் (வயம்பபல்கலைக்கழகம்)*

## நாளை

மாசி 24

செவ்வாய்க்கிழமை

திதி: பிரதமை

முற்பகல் 11.09 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி

காலை 7.51 வரை.

அமிர்தயோகம்: 10.55—12.25

ராகுகாலம்: 3.25—4.55

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

வாழ்க்கையின் தன்மை யைக் காலத்தைக் கொண்டு அளவிட முடியாது. மனி தன்நாணயத்தைக் கொண்டு தான் அதனை அளவிட முடி யும்.

- ஜான்லைல்

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### அடியார்க்கு எளியவன்

பற்றறுத்தவர் பற்றினுக் கென்றுமே
பற்று கோடெனப் பற்றை அருள்பவன்
கற்ற கல்வியிலும்மிக மேலவன்
காதல் செய்யடி யாருக் கெளியவன்
வற்ற லுற்ற மரமென ஈழவர்
வாடி யேவதங் கும்நிலை காணவே
உற்ற னன்கொடி ஏற்றினன் வண்ணையின்
உத்த மன்வயித் தீச்சர மன்னனே.

சென்ற வைசெலச் சென்றதோர் காலத்தின்
தீமை யாவையும் தீயினிற் பஞ்செனப்
பொன்ற வைக்குவன் போக்குவன் நாமெலாம்
புதுமில் லேனியத் தின்பினை ஆர்குவோம்
கொன்றை வார்சடைக் கூத்தனின் கூத்தினால்
குதூக லத்தினி லேதிளைத் தாடுவோம்
நன்று நன்றவன் நாண்மலர்ப் பாதமே
நந்த மக்கிதம் நல்கிடும் ஐயம் ஏன்?

- சொக்கன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அவிசலா கந்தையா என்பவரது தேசிய அ.அ (இல. 755711284 V), விசேட அ.அ. (இல. 0905009463) என்பன ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயில் வீதியில் 25-02-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(74219)

கலாசாலை வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த வல்லி. நிலோசினி என்பவரது விசேட அ. அட்டை (0902030660), பாடசாலை அ. அட்டை (திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம்) இரண்டும் 27-2-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் அல்லது J/114 கிராம அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும்
(74220)

## சிரமதானப்பணி

அளவெட்டி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் அப்பகுதியின் இரு பிரதான ஒழுங்கைகள் சிரமதானப் பணி மூலம் சீர் செய்யப்பட்டன.

இச் சிரமதானப் பணிக்கு அப்பகுதியில் வசிக்கும் பலர் உதவியதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் செ.யோ. கொட்வின் தெரிவித்தார்.
((ஐ-30

### தவறிவிட்டது

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவராசா சிறிகாந்தா என்பவரது தேசிய அ.அட்டை (773213550V), விசேட அ. அட்டை (0905017400) மாதகலுக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(74201)

கல்வியங்காடு வீரபத்திர கோயிலடியைச் சேர்ந்த சண்முகலிங்கம் விநோதன் என்பவரது தேசிய அ. அ, விசேட அ. அ, யாழ். இந்து பாடசாலை அ. அ. என்பன 04-03-2000 அன்று கல்வியங்காடு சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கல்வியங்காட்டிலுள்ள சாயிதொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்து உதவவும்.
(74206)

டச்சு வீதி சண்டிலிப்பாயைச் சேர்ந்த அருமைநாயகம் நிர்மலன் என்பவரது விசேட அடையாள அட்டை (0906021830) யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி அ. அ இரண்டும் மானிப்பாய் பிரதான வீதிக்கும் சங்கரப்பிள்ளை வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(74217)

### இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக் கோழிகள் உடன் தேவை. நல்லவிலை கொடுக்கப்படும். தொடர்பு: தவ பாலசிங்கம், இல. 19, முருகசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
[74051]

### விற்பனைக்கு

மூன்று அடுப்புகளுடன் கூடிய புத்தம் புதிய ஜப்பானியத்தயாரிப்பான நெஷனல் காஸ்குக்கர் (National Gas Cooker) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ஆனந்தமூர்த்தி இல: 237, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.
(74188)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் நடைமுறையில் பேசப்பயில [புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. புதன், வியாழன், சனி, ஞாயிறு 12 மணி] வாரம் 4 வகுப்புக்கள். அனுபவம் மிக்க ஆசிரியர்:— ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(74221)

### அபூர்வ ஜோதிடம

தொல்லை தரும் நோய் நீக்கம், மகிழ்ச்சி பெருகும் திருமண வாழ்வு, அதிர்ஷ்டத்தை நோக்கிய தொழில். UP 304, ஆலடிச்சந்தி, பலாலி வீதி, கந்தர்மடம்.
(74160)

### தவறிவிட்டது

கஸ்தூரியார் வீதிக்கும் கே. கே. எஸ். வீதியூடாக இணுவிலுக்கும் இடையில் பொன்கட்டி (பவுண்) ஒன்று 1-3-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கணேஷா ஜுவலறி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.
(74223)

### க.பொ.த (உ/த)பரீட்சை

க.பொ.த.(உ/த)பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பரீட்சைத் திணைக்கள அறிவுறுத்தல்களுக்கும் அளவுக்கும் (21cmX28cm) அமைய அச்சிட்டு விற்பனையாகின்றன. படிவம் ஒன்றின் விலை ரூபா 3.0ம. தபால் உறை ரூபா 1.00. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/11132)

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி புஸ்பலீலாவதி நடராசா

தோற்றம் 27 – 09 – 1929 மறைவு 06 – 03 – 1999

ஆண்டொன்று சென்றாலும் அம்மா நாம் உம் பிரிவை
அகற்றவும் முடியவில்லை.
மாண்டம்மா சென்றாரென் றெண்ணியே எம்மை நாம்
மயக்கவும் முடியவில்லை.
மீண்டம்மா வருவாரென் றெண்ணமே உள்ளத்தில்
மேலோங்கி நிற்குதம்மா!
பூண்டொன்று பூமியில் மறையும் வரை எம்மிதயம்
புண்பட்டு நிற்குமம்மா!

செ. நடராசா (கணவர்),
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் (மகள்)
அதிபர், இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்.
செல்வன் சி. ஆரூரன் (பேரன்)
மகாஜனக் கல்லூரி.
[42276]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணின் மடியில் 03-01-1959



மண்ணின் அடியில் 17-02-1999

### அமரர் வீ. தருமகுலசிங்கம் (தருமன்)

திதி: 06-03-2000

விடிய விடிய கண்விழித்து அன்பால், அரவணைப்பால்
மடியில் உன்னைத் தாலாட்டிய தாயைக்கூட நீ ஏன் மறந்தாய்? —பொழுது
விடியுமுன்னே உன் இவ்வுலக வாழ்வை
முடிய வைத்து நீ சென்றது எங்கே? ஓ
கொடிய காலனின் கோரப்பசிக்கு இரையாகி விட்டாய் — கண்ணீர்
வடிய நின்று காலமெல்லாம் நாம் வேதனைத் தீயில் — வெந்து மடிகின்றோம்.
குண்டு பட்டிருந்தோர் உண்டு. கொடுஞ்சமரில் உயிர் துறந்தோருண்டு.
கொலைஞரால் மாண்டோர் உண்டு
பண்டைய ஊழினாலே பகைவரால் மடிந்தோர் உண்டு.
தென்கடல் மாய்ந்தோர் உண்டு;
செல்லினால் தீய்ந்தோர் உண்டு;
இயற்கையால் இறந்தோர் உண்டு;
உன் மரணம் எந்த வகையைச் சேர்ந்தது?
மாண்டுபோன உன் வாழ்வால்
ஆண்டொன்று திரும்பும் இவ்வேளையில்
மீண்டும் நீ எம்முடன் வாழ்ந்த நாள்களின் நினைவால்
மூண்டது எம் வாழ்வில் சோகம்!

அனைத்துலக அன்னை ஆதிபராசக்தியின் பாதார விந்தத்தை எமது கண்ணீரால் கழுவி உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து எம் சோக வாழ்வைத் தொடர்கின்றோம்.

தகவல்:
வீ. சொர்ணாம்பிகை (தாய்)
42, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
(74224)
தாய், சகோதரிகள், மைத்துனர், மருமக்கள், பிள்ளைகள்.

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மார்ச் 6

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த லக்ஷார்ச்சனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

லக்ஷார்ச்சனை பூர்த்தி எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம்பெறும்.

மாலை 5.00 மணிக்கு பூரணதின திருவிளக்கு, சுமங்கலி பூசை, வழிபாடுகள் ஆகியன நடைபெறவிருக்கின்றன
(ஐ-30)

★ ★ ★

சுழிபுரம், மார்ச் 6

பண்ணாகம் - விசவத்தனை முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 11.30 மணிக்குத்தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 4 மணிமுதல் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.
(க-28)

★ ★ ★

குருநகர், மார்ச் 6

சற்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து எதிர்வரும் 13 ஆம் திகதி திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும்.
(க-51)

★ ★ ★

சுழிபுரம் மார்ச் 6

சுழிபுரம் கிழக்கு திசமனை கண்ணகை அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.15 மணி முதல் 11.20 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து கால்மண்டல அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.
(க-28)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 6

கொய்யாத் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ ஞானசெல்வ விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு 108 கலசசங்காபிஷேகமும் விசேட பூசை, வழிபாடும் மாலை பஞ்சமுகார்ச்சனையும் பின்னர் சுவாமி வீதிவலம் வருதலும் இடம்பெறும்.
(ஐ-30)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 6

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை ஆதிசிவ வீரபத்திர சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவமும் நடைபெற்று மஹோற்சவம் நிறைவுறும்
(க-173)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 6

நல்லூர் பாணன்குளம் நாச்சிமார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தின் இரதோற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.
(க-173)

# நாட்டுக்கூத்து சிறுவர் அரங்கிற்கு தமிழ்த்தின போட்டியில் சிறப்பிடம்

இவ்வருடம் நடைபெற உள்ள தமிழ்மொழி தினப் போட்டிகளில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் நாட்டுக்கூத்து, ஆடற்கதை (நாட்டிய நாடகம்) சிறுவர் நாடகம் என்பன தனித்துவம் மிக்கவையாக நடத்தப்பட உள்ளன.

நாட்டுக்கூத்து வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, சிந்துநடைக் கூத்து, இசை நாடகம், விசேட கூத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டு நடைபெற உள்ளன.

தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளில் சிறுவர் நாடகம் (சிறுவர் அரங்கு) தனித்துவமான ஒன்றாகச்சேர்க்கப்பட்டு மாகாணமட்டமொழித்தின விழாவின் போது தனி ஒரு நாள் விழாவாக நடைபெற உள்ளது.

கோட்டமட்ட போட்டிகள் வலிகாமம் கல்வி வலையத்தில் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன் நடத்தப்படும்.

வலயமட்ட போட்டிகள் மே மாதம் 20 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

(ஐ-152)

## இளைஞனை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 6

சுதுமலை தெற்கு, சாவற்காடு பகுதியைச் சேர்ந்த சமரபால ஜோண்சன் (வயது 26) என்ற இளைஞன் கடந்த 2 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வியாபாரத்துக்காகச் சுன்னாகத்துக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்ற இவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

# புலோலி தெற்கு இளைஞன் மரணம்: சடலத்தை தோண்டி எடுத்து கொழும்பு அனுப்புமாறு நீதிவான் உத்தரவு

நான்கு மாதங்களுக்கு முன்னர் புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் புதைக்கப்பட்ட இளைஞனின் சடலத்தைத் தோண்டி எடுத்து கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் கடந்த வெள்ளி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

புலோலி தெற்கு சாரையடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது 27) என்ற இளைஞர் கடந்த வருடம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி இப்பகுதியிலுள்ள ஆலயக்கிணறு ஒன்றில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

குறித்த சடலத்தை மயானத்திலிருந்து தோண்டி எடுத்து, சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் அப்பொழுது உத்தரவிட்டார். இது தொடர்பாக யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. இராஜேஸ்வரன் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்த போதும், குறித்த திகதியில் (வெள்ளி) சடலத்தை மீட்பதற்கு கால அவகாசம் போதாது என்று, பருத்தித்துறை பொலீஸார் நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து இம் மாதம் 31 ஆம் திகதி இதனை நடைமுறைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில், வழக்காளியின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிவா பாலேந்திராவும் எதிராளி சார்பில் சட்டத்தரணிகள் எஸ். பரமராஜா திருமதி. விஜயராணி உருத்திரேஸ்வரனும் ஆஜரானார்கள்.

(இ-104)

# பாடசாலை மாணவர் பலரிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் பல மாணவர்கள் பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் இருப்பதாகத் தெரியவருகின்றது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பல பிரச்சினைகளுக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக தற்போது நடைபெற்றுவரும் பல விளையாட்டுப்போட்டிகளில் இவர்கள் கலந்துகொள்ள முடியாமல் உள்ளனர்.

பெற்றோர்களின் அறியாமை, சான்றிதழின் முக்கியத்துவம் பற்றி உணராமை மற்றும் சமூகப் பிரச்சினைகள் என்பவற்றால் மாணவர்களுக்கு உரிய பிறப்புச் சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாமல் உள்ளதாகத் தெரியவருகின்றது.

சமுதாய ரீதியான பொறுப்பை உணர்ந்து தமது வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் பிறப்புச் சான்றிதழ் இல்லாத மாணவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதில் உதவி புரிய வலிகாமம் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

பிறப்புச் சாட்சிப் பத்திரம் இன்றிக் கல்வி பயிலும் மாணவர் விவரங்கள் பாடசாலை ரீதியாகத் திரட்டப்பட்டுவருகின்றன.

(ஐ-152)

## குரங்கு பாய்ந்து ஒருவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 6

மரணச் சடங்கு ஒன்றில் கலந்துவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து பளை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மீது குரங்கு பாய்ந்ததில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகே உள்ள சுமைதாங்கிச் சுவருடன் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

கடந்த புதன்கிழமை மாலை கொடிகாமம் பஸ் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பளை தம்பகாமத்தைச் சேர்ந்த க. கனகரத்தினம் (வயது 52) என்பவர் காயமடைந்து பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-117)

# தரமற்ற ஹரிக்கேன் லாம்பு யாழ். கடைகளில் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணத்தில் உள்ள சில வர்த்தக நிறுவனங்களில் தரம் குறைந்த ஹரிக்கேன் லாம்புகள் விநியோகிக்கப்படுவதாக பாவனையாளர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட இந்த லாம்புகள் 200 ரூபாவுக்கு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த லாம்புகளை விலை கொடுத்து வாங்கி தேவைக்கு பயன்படுத்திய சில நாள்களிலேயே அதன் திரிதூண்டி இயங்கமுடியாதிருப்பதுடன் வேறு திரிதூண்டிகளையும் இவற்றுக்கு பயன்படுத்த முடியாதுள்ளது.

இதனால் புதிதாக வாங்கி ஒரு வாரத்தில் கூட இந்த லாம்புகளை பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது என்றும் பாவனையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ஐ-5)

## வேலைக்குச் சென்றவர் திரும்பவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 6

கடந்த புதன்கிழமை தொடக்கம் இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பலாலி றோட், இரண்டாம் ஒழுங்கையைச் சேர்ந்த இராக இராசேந்திரன் (வயது 25) என்ற இளைஞரே காணாமற்போனவராவார்.

வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

# 'புத்தகப் பூச்சிகள்' என்ற நிலையில் இருந்து மாணவர் விடுபட பொதுப் பரீட்சை உதவும்

'பாட அறிவுக்கு வெளியே மாணவரின் கற்றலைத் தூண்டும் பொதுப் பரீட்சை' என்னும் தலைப்பில் நேற்றைய உதயனில் 'சூரிய காந்தி' பகுதியில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.

ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சையில் அறிமுகமாகும் புதிய பொதுச் சாதாரண பரீட்சை குறித்த ஓர் அறிமுகமாக இக் கட்டுரை அமைகிறது.

3. நியாயிக்கும் ஆற்றல்:

பகுத்தாய்வு நியாயித்தல், முறைமை நியாயித்தல், எண் முறை நியாயித்தல், வெளி நியாயித்தல் என்பனவற்றை உள்ளடக்கியதாக வினாக்கள் அமையும்.

4. விளக்க தொடர்பாடல் ஆற்றல்:

பந்தியின் பிரதான கருத்துக்களை இனங்காணல், கூற்றில் உள்ள கருத்துக்களை விளங்கிக்கொள்ளல், கூற்றின் உள்ளடக்கக் கருத்துக்களிடையே உள்ள தொடர்புகளை இனங்காணல், கூற்றின் யாதாயினும் நடைமுறையின் விளைவுகளை இனங்காணல், விடயங்களுக்கும் கொள்கைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளங்கிக் கொள்ளல்.

ஆலோசனைகளைக் கடைப்பிடித்தல், செய்திகளை சூறியீடாக்கலும் குறியீடகற்றலும், வரைபுகளின் படங்களின் வரைபடங்களின் மூலம் எடுத்துரைக்கப்படும் தரவுகளை விளங்கிக் கொள்ளல். கருத்துக்களை திருத்தமாக வெளியிடுதல், சிந்தனைகளையும் எண்ணங்களையும் கருத்துள்ள ஒழுங்கில் அமைத்தல். என்பனவற்றை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்டதாகப் பரீட்சை அமையும்.

பொதுச் சாதாரண பரீட்சையில் தேறுதல் பல்கலைக் கழக பிரவேசத்திற்குரிய தனித்தகைமையாக மட்டும் கருதப்படும். தீர்மானிக்கப்படும் குறைந்த பட்சப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டே பரீட்சையின் சித்திபற்றி முடிவு செய்யப்படும். ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையின் மற்றைய பாடங்கள் போன்று உயர்ந்த பட்சப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அது தீர்மானிக்கப் படமாட்டாது. இது தெரிவுப் பரீட்சையின் இயல்பைக் கொண்டிருப்பதில்லை. அதில் அடைவுப் பரீட்சையின் இயல்பே இருக்கும்.

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே தகுதியானவர்களை பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மூன்று பாடங்களுக்கும் பெறும் புள்ளி மொத்தமே பயன்படுத்தப்படும். மாணவர்கள் மூன்று பாடங்களிலும் பெறும் புள்ளிகள் எவ்வளவு உயர்வாக இருந்தாலும் 'பொதுச் சாதாரண பரீட்சையில்' சித்தி பெறத் தேவையான குறைந்த புள்ளியைப் பெற்றிருக்காவிட்டால் அவர்களுக்கு பல்கலைக்கழகம்செல்லும் வாய்ப்பு கிடைக்கமாட்டாது.

எவ்வாறாயினும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்படும். மாணவர் எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாது என அறிவித்துள்ளார் கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. றிச்சாட் பத்திரான.

### எதிர் நோக்கும் புதிய சவால்

பொதுச்சாதாரணபரீட்சை புத்தகப் பூச்சிகளாக இருக்கும் மாணவர்களின் நிலைமையை மாற்றி தாம் வாழும் உலகம் பற்றி அறிந்து கொள்வதற்கு செய்தித்தாள் வாசித்தல், வானொலிச் செய்திகளைக் கேட்டல், அறிவியல் நூல்களை வாசித்தல், தகவல்களைத் தொகுத்தல், குறிப்பெடுத்தல் போன்ற பழக்கங்களை விருத்தி செய்யும் என எதிர்பார்க்கலாம். பெரும்பாலும் மாணவர்கள் தகவல்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள்.

பெற்றோரும் பிள்ளைகளை பாடசாலை — தனியார் கல்வி நிலையம் என காலம், நேரம், உடல் — உளத்தாக்கங்களைக் கருத்திற் கொள்ளாமல் அனுப்புகின்றனர். பரீட்சையில் சித்திபெறவேண்டும், பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாக வெளிவர வேண்டும் என உந்துகின்றபோதிலும் பாட அறிவுக்கு வெளியில் பிள்ளையின் அறிவு மட்டம் எத்தகையது என்பதில் கவனம் செலுத்துவது இல்லை. இந்த நிலைப்பாட்டை பொதுச்சாதாரண பரீட்சை மாற்றி அமைக்கலாம்.

பொதுச்சாதாரண பரீட்சைக்கான வாய்ப்புகள் வசதிகள் நகர்ப்புற, கிராமப்புற மாணவர்களிடையே சமமானதாக இல்லாத போதிலும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பரீட்சை புதிய நிலைப்பாடுகளை ஏற்படுத்தும் என்பதில் நம்பிக்கை கொள்ளுவோம். ★

ஞான ஆதவன்


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சுப்பையா் செல்வநாயகம்

6-3-2000

(ஓய்வு பெற்ற கிறாட்டர்)

உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காது! ஆறாது! தீராது!

குடும்பத்தினர்

"கௌரிமாலா"

மானிப்பாய் கிழக்கு

(74182)

### மின் வெட்டு இன்றி மாவட்டம் முழுவதும்

# அடுத்த மாதம் முதல் சீரான மின்விநியோகம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் முதல் 24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து அண்மையில் கொண்டுவரப்பட்ட 'கூல் எயார்' நிறுவனத்தின் ஒன்பது பாரிய மின் பிறப்பாக்கிகளைப் பொருத்தும் வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருவதாகவும்—

அவற்றைப் பொருத்தும் வேலைகள் முடிவடைந்ததும் யாழ்ப்பாணத்தில் மின் வெட்டு இன்றி சீரான மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் —

மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இதே வேளை —

ஏற்கனவே பழுதடைந்திருந்த இரு மின் பிறப்பாக்கிகளில் ஒன்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மற்றைய மின்பிறப்பாக்கியும் திருத்தப்படவுள்ளது.

தற்பொழுது பொருத்தப்படும் 9 மின் பிறப்பாக்கிகளும் இயங்கத் தொடங்கியதும் யாழ். மாவட்டம் முழுவதற்கும் சீராக மின் விநியோகம் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது (ஐ-5-9)

## பழுதடைந்த 'எக்ஸ்-றே' இயந்திரம் கொழும்புக்கு

யாழ். போதனா வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் உள்ள 'எக்ஸ்-றே' இயந்திரம் திருத்த வேலைகளுக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

ஆஸ்பத்திரி 'எக்ஸ் - றே' பிரிவில் இயங்கி வந்த இந்த இயந்திரம் கடந்த 15 நாள்களுக்குமேலாகப்பழுதடைந்து இயங்க முடியாத நிலையில் உள்ளது.

ஆஸ்பத்திரி பொறியியலாளர்கள் இந்த இயந்திரத்தைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். எனினும் இதை இங்கு வைத்துத் திருத்துவதற்கான தொழில் நுட்ப வசதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் இல்லை என்று ஆஸ்பத்திரி பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்தே பழுதடைந்த 'எக்ஸ்-றே' இயந்திரத்தின் செயற்படாதபாகங்கள் கழற்றி எடுக்கப்பட்டுத் திருத்த வேலைகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன.

இதேவேளை—

வைத்தியசாலை 'எக்ஸ்-றே' பிரிவில் தற்போது இரண்டு 'எக்ஸ்-றே' இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருப்பதாகவும்—

இவற்றின் உதவியுடனேயே தற்போதுவைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களைச் சமாளிக்க வேண்டியுள்ளதாகவும்- ஆஸ்பத்திரி நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-9-15)

## யாழ். மத்திய பஸ் நிலையத்திலும் 'சீசன்டிக்கெட்'வழங்க கோரிக்கை

வடமராட்சி, மார்ச் 6

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் வைத்து 'சீசன்டிக்கெட்' விற்பனை செய்யப்படாமையினால் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகப் பயணிகள் முறையிட்டுள்ளனர்.

பயணிகளுக்கான சீசன்டிக்கெட்டை வடபிராந்திய போக்குவரத்துச் சபை மீண்டும் அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய டிப்போக்களில் வைத்தே 'சீசன் டிக்கெட்டுகள்' பயணிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகியபிரதேசங்களைச் சேர்ந்த பயணிகள் இதனைப் பெறுவதற்காகக் கோண்டாவில் டிப்போவுக்குச் சென்றுவர வேண்டி உள்ளதுடன் இதற்குப் பல மணிநேரத்தைச் செலவிட வேண்டியுள்ளதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் பயணிகளுக்கான சீசன்டிக்கெட் விற்பனை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நடைபெற்று வந்தது போல இன்றைய கஷ்டமான காலத்திலும் அங்கேயே சீசன்டிக்கெட் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தால் பயணிகளுக்குச் சிரமம் இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ - 173)

### யாழ். ஆஸ்பத்திரியில்

## ஆய்வுகூடப் பணியாளர் மேலும் ஒருவர் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடப் பிரிவில் இதுவரை காலமும் வெற்றிடமாக இருந்து வந்த ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளர் பதவிக்குக் கடந்த வாரத்தில் மேலும் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்

யாழ். ஆஸ்பத்திரியில் மேற்படி பதவிக்கு 12 வெற்றிடங்கள் கடந்த பல வருடங்களாக நிரப்பப்படாத நிலையில் இருந்து வந்தன. எனினும் இந்த வெற்றிடங்களுக்கென அண்மையில் ஓர் உத்தியோகத்தர் மட்டுமே நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போது கல்முனை வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டிருந்த ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர் ஒருவரும் யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

அண்மையில் கொழும்பு மருத்துவ ஆய்வு கூடக் கல்லூரியில் பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறிய மூன்று தமிழர்களில் இருவரே தற்போது யாழ். ஆஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-9-15)

## தாளையடிக்கு பஸ்

மூன்றுமாத கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து தாளையடிக்கான பஸ் சேவைகள் கடந்த சனி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலை 6-00 மணி காலை 9-45 ஆகிய நேரங்களில் யாழ் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு தாளையடி சென்று அங்கிருந்து மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி வரும்.

தாளையடியில் இரவு பஸ் தரித்து நிற்கமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ.117)

## தீக்காயங்களுடன் பெண் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 6

தனக்குத் தானே தீமூட்டி எரிந்ததாகத் தெரிவித்து உடல்பூராகவும் எரிந்த நிலையில் இளம்பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் கந்தசாமி மாலினி (வயது 34) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## கிளைக்குழுக்களை தெரிவு செய்யத் தேர்தல்

அரியாலை, மார்ச் 6

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற சமயம் இரண்டு கிளைகளில் தேர்தல் நடைபெறவில்லை.

இந்தக் கிளைகளில் உரிய முறைப்படி தேர்தலை நடத்தி கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட கிளைகளில் போதிய உறுப்பினர்கள் சமுகம் கொடுக்காததினால் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## ஸ்ரீராமகிருஷ்ணரின் 165 ஆவது ஜனன தினம்

வடமராட்சி, மார்ச் 6

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 165 ஆவது பிறந்தநாள் திதி பூசை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 5. 30 மணி முதல் பகல் 11.30 மணி வரை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இதனை ஒட்டி மங்கள ஆரார்த்தி, விசேட பூசை, பிரசாதம் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளன.

(க-173)

## குமுதினிப்படகு இன்றுமுதல்சேவை

ஊர்காவற்றுறை — நெடுந்தீவுப் போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும் குமுதினி மோட்டார்ப்படகு இன்று முதல் மீண்டும் தனது வழமையான சேவையை ஆரம்பிக்கவுள்ளது. (ஐ-111)

## மக்கள் மீளக்குடியமர வசதியான இடங்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம். மார்ச். 6

யாழ்ப்பாணத்தில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு வசதியான இடங்களையும் குடியேற விரும்புவோரது விவரங்களையும் தருமாறு வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் யாழ். அரசாங்க அதிபரிடம் கோரி உள்ளார்.

கொழும்பில் கடந்தவெள்ளியன்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே ஆளுநர் அசோக ஜெயவர்த்தனா மேற்படி விவரங்களைக் கேட்டுள்ளார்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள், வட கிழக்கு அரசாங்க அதிபர்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் கலந்து கொள்ளவில்லை.

வவுனியாவில் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஸ் ஆளுநரிடம் கேட்டுக் கொண்டதை அடுத்தே ஆளுநர் குறிப்பிட்ட விவரங்களை அரச அதிபரிடம் கேட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து வன்னிக்கான போக்குவரத்துக்கென உயிலங்குளம் ஊடான பாதையைத் திறக்க வேண்டும் என மன்னார் அரச அதிபர் கேட்டதற்கு, தற்பொழுது அதற்கான சூழ்நிலை இல்லை என்றும் ஆளணிப் பற்றாக்குறை இருப்பதாகவும் தெரிவித்து பின்னர் இந்த விடயம் பற்றித் தீர்மானிக்கலாம் எனவும் ஆளுநர் கூறினார்.

அத்துடன் மீனவர்களின் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

(ஐ-10-3)

## 50 பெண்களுக்குத் தொழிற் கடன்

வடமராட்சி, மார்ச் 6

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) கரையோரப் பகுதியில் குடும்பத் தலைவர்களை இழந்த 50 பெண்களுக்குச் சுய தொழில்களை மேற்கொள்ள தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ. நா தூதரக நிதி உதவித் திட்டத்தின்கீழ் இப்பகுதியில் உள்ள கற்கோவளம் தொடக்கம் தொண்டமனாறு வரையிலான இடங்களில் வதியும் பெண்களுக்கே இச் சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டது.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட இக் கடனைப் பெற வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் 14 கிளைச் சங்கங்களிலிருந்து பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நடைபெற்ற முதலாம் கட்டக்கடன் வழங்கும் வைபவத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் என். மகேந்திரன், கடற்றொழில் பரிசோதகர் எஸ். மகேஸ்வரன், சமாசச் செயலாளர் எஸ். சூரியகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-173)

## பணிமனை அமைப்பு

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கான தனியான பணிமனை பருத்தித்துறையில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இது வரை காலமும் சமாசத்துக்கான பணிகள் யாவும் அதன் மீன் பிடி உபகரணங்கள் விற்பனை நிலையத்திலேயே நடைபெற்று வந்தது.

மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையத்துக்கு அருகில் சமாசத்துக்கான பணிமனை திறக்கப்படும். (ஐ-173)

## நிவாரணப் பொருள் விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக வழங்கப்பட்டு வரும் 84-வது தொடர் உலர்உணவு முத்திரைக்குரிய பொருள்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் திருப்பலி அழைப்பும்



மலர்வு
1951-07-06

உதிர்வு
2000-02-07

### அமரர் நிக்கலஸ் ஜஸ்ரின் ஞானசேகரம்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (7-3-2000) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரையும் இதில் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

(பூசை முடிந்ததும் அனைவரையும் அன்புடன் வீட்டுக்கு அழைக்கின்றோம்.)

மனைவி மேரிசறோஜா, பிள்ளைகள், குடும்பத்தினர்.

23/10, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[74218]

# அதிரடி அரங்கு

நாளை மறுதினம் சர்வதேச மகளிர் தினம்.

யாழ்ப்பாணத்தில் பெண்கள் உரிமைக்காக ஓர் அமைப்பின் பேரில் இயங்குவதாகக் கூறிக் கொள்ளும் ஓர் அம்மணி, அன்றையதினம் ஒருசில டசின் பெண்களையும் சேர்த்துக் கொண்டு 'உதயன்', 'சஞ்சீவி' அலுவலகத்தை நோக்கி ஊர்வலம் செல்லப் போவதாகக் கூறிக்கொண்டு இருக்கின்றார்.

சஞ்சீவியில் வெளியாகும் ஒரு தொடர் பெண்ணுரிமையைப் பாதிப்பதாகவும் அதற்கு எதிராகவே இந்த ஊர்வலம் என்றும் அவர் கூறி வருவதாகத் தகவல்.

அத்தகைய குற்றச்சாட்டுக்கள் எதுவும் இதுவரை அந்த அமைப்பின் பெயரால் உதயனுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப் படவில்லை என்பதும் ஒரு விடயம்.

உதயன் - சஞ்சீவி மக்கள் பத்திரிகை. ஈழத்தமிழரின் வாழ்விலும் தாழ்விலும் இரண்டறக் கலந்தது.

உதயன் - சஞ்சீவிக்கு எதிராகக் கருத்து வெளியிடவும், வன்முறையின்றி அமைதி ஊர்வலம் நடத்தி தங்கள் விமர்சனங்களை முன்வைக்கவும், வெளிப்படுத்தவும் - அகிம்சை முறையில் கண்டிக்கவும், தூற்றவும், போற்றவும் நம் மக்களுக்கு உரிமையுண்டு. அதை உதயன் - சஞ்சீவி உட்பட யாரும் கேள்விக்குள்ளாக்க முடியாது.

ஏன் உதயன் - சஞ்சீவிக்கு எதிராக வாசகர்கள் எழுப்பிய கண்டனக் குரல்களையே - 'சஞ்சீவி' மஞ்சள் பத்திரிகை என்று விமர்சித்ததையே - 'சஞ்சீவி' தனது பக்கத்தில் முன்னுரிமை கொடுத்துப் பிரசுரித்த பண்பை வாசகர்கள் நன்கு அறிவர். அதற்கு வாசகர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதமும் கூட சஞ்சீவியில் அவ்வப்போது பிரசுரமாயிற்று.

ஆனால் அப்போதெல்லாம் தமது கருத்தைப் பகிரங்கமாக முன்வைக்காமல் வாளாவிருந்துவிட்டு இப்போது திடீரென ஊர்வலப் பாணியில் விமர்சனத்தை முன்னெடுக்க முயல்பவர்கள் யார், அவர்களின் நோக்கம் என்னவென்பது சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டும் என்று உதயன் விரும்புகின்றான்.

ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்று அடிமை நிலையினின்றும் விடுவிக்கப்பட்டு, இந்த நாட்டில் சம உரிமையுடையவர்களாக சமத்துவத்துடனும் சமாதானத்துடனும் கௌரவத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காகத் தன் ஸ்தாபிதம் தொட்டு உழைத்து வருபவன் உதயன். இதற்காகப் பல்வேறு இடர்களைச் சந்தித்தவன்; சந்தித்துக்கொண்டிருப்பவன்.

உதயனின் இந்த நிலைப்பாடு காரணமாக, இங்கு சில சார்பு நலன்களில் (Vested Interest) அதிக அக்கறை கொண்டவர்களின் எரிச்சலுக்கும் விரோதத்துக்கும் 'உதயன்' அவ்வப்போது ஆளாக வேண்டி இருந்தான். அதிகார வர்க்கங்களூடாக - தம்மை இனங்காட்டாது - நெருக்குதல் கொடுத்து, உதயனின் இன சுதந்திர உணர்வுப் போக்கை அடக்க முயன்று தோற்றுப் போனவர்கள் -

ஈழத் தமிழ்மக்கள் மனதில் உதயனுக்கு இருக்கும் பற்றுறுதிப் பிடிப்பை சிதைப்பதில் வெற்றி காண முடியாதவர்கள்-

அதனால் ஏற்பட்ட எரிச்சலில் இப்போது உதயனின் செல்வாக்கைச் சரிக்க ஊர்வல மிரட்டல் காட்டுகின்றார்கள்.

இங்கு, நமது குடாநாட்டில் பெண்கள் சமுதாயத்தில் பல்வேறு முறையில் அடக்கப்பட்டாலும், தூசிக்கப்பட்டாலும், துவேசிக்கப்பட்டாலும் அவை எல்லாவற்றையும் விட அவர்கள் இன்று, எதிர்நோக்கும் தலையாய பிரச்சினையின் அடிப்படை வேறு. சந்திக்குச் சந்தி சைக்கிளில் இறங்கி ஏறும் பெண்களிடம் கேட்டால் அவர்கள் கதை கதையாகச் சொல்வார்கள். கிருஷாந்தி குமாரசுவாமி தொடங்கி சாரதாம்பாள் வரையும் - ஏன் அதற்குப் பின்னும் தொடரும் அவலங்கள் வெள்ளிடைமலை. குடாநாட்டில் வசிக்கும் இளம் பெண்களின் - சமூகத்தில் நியாயமான உணர்வுடன் வசிக்கும் பெண்களின் - மனப்பீதி எது சம்பந்தமானது என்பது அனைவருக்கும் புரியும்.

அத்தகைய நிலைமைகளுக்காக வீதிக்கு இறங்கிப் போராட வேண்டிய மகளிர் அமைப்பினர் - எங்கே அப்படிப் போராடினால் தமக்கும் தலைவிக்கும் உள்ள நல்லுறவு பாதிக்கப்பட்டுவிடுமோ என்று அடங்கி வாளாவிருப்பவர்கள் - உதயனுக்கு எதிராக வீதிக்கு இறங்கி தமது நன்றி விசுவாசத்தை யாருக்குக் காட்டப் போகின்றார்கள்?

இளம் பெண்களின் இருப்பை - வாழ்வியலை - கேள்விக்குள்ளாக்கியிருக்கும் விவகாரத்தில் கொதித்து எழுந்து வீதிக்கு வந்து போராடுவதை விட்டு, உதயனுக்கு எதிராக வீதிக்கு வர முயல்கின்றார் இந்த அம்மணி.

அதிகாரிகளுக்கு குசலம் விசாரித்து சலாம் வைப்பதை விடுத்து, அவர்களின் கீழ் இருக்கும் அனியினரால் பெண்மை கேவலப்படுத்தப்படுவதை - ஆகக் குறைந்தது புள்ளிவிவரங்கள், தகவல்களைத் தங்கள் அமைப்பு மூலம் சேகரித்து அம்பலப் படுத்துவதையாவது செய்தால் அது பயனுள்ளதாக இருக்கும்.

முதலில் அதைச் செய்துவிட்டு பின்னர் உதயன், சஞ்சீவிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினால் அது சற்று நியாயமாக இருக்கும்.

தமக்குப் பிரசாரம் தேடி, தமது அமைப்பை உயர்ந்த அமைப்பாகக் காட்டுவதற்கே இந்த ஊர்வல உத்தியைக் கையாள உத்தேசித்திருக்கின்றார் இந்த அம்மணி.

குடாநாட்டு மகளிரின் நன்மைக்கு என வெளிநாடு உட்படப் பலதரப்பிலிருந்தும் வரும் நிதி, கணக்கு - வழக்குகள் எல்லாம் தனி ஒருவர் கையில் எவ்வாறு கையாளப்படும் ஒரு நிலைமை இங்கு உள்ளது என்பது விரிவாக, விளக்கமாக ஆராய்ந்து அம்பலப்படுத்தப்படவேண்டிய மற்றொரு விடயமாகும். ஆனால் அதனை இங்கு, இப்போது பிரஸ்தாபிப்பது உதயனுக்கு எதிராக அகிம்சை முறையில் குரல் எழுப்ப முற்படுபவர்களை - அவர்கள் எது கருத்துச் சுதந்திரத்தை - மிரட்டி அடக்க முற்படும் முயற்சியாகவும் அர்த்தப்படுத்தப்படலாம்.

ஊர்வலத்தில் இணைந்து கொள்ளுமாறு தனித்தனியாக விடுக்கப்பட்ட அழைப்பை முகத்துக்காக ஒப்புக்கொண்டவர்கள் கூட, என்ன நோக்கத்துக்காக ஊர்வலத்தில் பங்குபற்ற இசைவு தெரிவித்தார்கள் என்பது ஒருபுறமிருக்க அதை ஏற்பாடு செய்தவர்களுடைய நோக்கம் என்னவென்பதை சீர்தூக்கிப் பார்ப்பது பொருத்தமானது.

– மின்னல்.

# மீண்டும் உண்ணாவிரதப் போரில் குதிக்கப் போவதாக எச்சரிக்கை!

## கைதிகளான சிப்பாய்கள் அரசுக்குக் கடிதம்

யுத்தக்கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனை குறித்துப் பேச்சு நடத்த அரசு பிரதிநிதி ஒருவரை வன்னிக்கு அனுப்பவும்.

இதுவிடயமாக அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மீண்டும் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்போம்.

மேற்கண்டவாறு யுத்தக் கைதிகள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

யுத்தக்கைதிகளின் சார்பில் கடற்படைக் கப்டன் அஜித் போயாகொட கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"புதுக்குடியிருப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எங்களை விடுவிக்க உருப்படியான அவசர நடவடிக்கையை எடுங்கள். இல்லாவிட்டால் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்போம்" என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமது பாதுகாப்பில் உள்ள யுத்தக்கைதிகளை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தனது பிரதிநிதி ஒருவரை வன்னிக்கு அனுப்பவேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். எனவே அரசு உடனடியாக ஒரு பிரதிநிதியை அங்கு அனுப்ப வேண்டும்" என்று காணாமற் போன படையினரின் பாதுகாவலர் சங்கத்தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது விடயத்தில் அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் எமது சங்கத்தின் உறுப்பினர்கள் வன்னிக்கு சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த யாத்திரை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்குத் தகவல் அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

# மட்டக்களப்புப் பொலீஸ் விடுதியிலிருந்து தமிழ்ப் பொலீஸாரை வெளியேற்றப் பணிப்பு

மட்டக்களப்பு பொலீஸ் நிலைய விடுதியில் இருக்கும் தமிழ்ப் பொலீஸாரை குடும்பங்களுடன் வெளியேறி வேறு இடங்களில் தங்குமாறு சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் சிங்கள பொலீஸார் வாகனத் தொடர் அணி மூலம் லீவில் செல்லும் போது தாக்குதல் அச்சுறுத்தல்களுக்கு இலக்காவதால் அவர்கள் தங்கள் குடும்பத்தவர்களை இங்கு கூட்டி வந்து பொலீஸ் விடுதியில் தங்க வைப்பதற்கு வசதியாகவே இந்த விடுதியில் தங்கியுள்ள தமிழ் பொலீஸாரை குடும்பங்களுடன் வெளியேறுமாறு அந்த உயர் அதிகாரி கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த விடுதியில் உள்ள தமிழ்ப் பொலீஸாரை அழைத்த இந்த உயர்அதிகாரி தமிழ்ப் பொலீஸாருக்கு புலிகளின் அச்சுறுத்தல் இல்லை என்பதால் பொலீஸ் நிலையத்திற்கு வெளியே பாதுகாப்பான இடங்களில் தங்கலாம். இந்த விடுதியில் சிங்களப் பொலீஸார் தங்கள் குடும்பத்தவர்களுடன் குடியேற வசதியாக நீங்கள் விடுதியை விட்டு வெளியேறுங்கள் எனத் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

மூன்று மாடிகளைக் கொண்ட இந்தப் பொலீஸ் விடுதியில் 24 குவாட்டர்ஸ்கள் உள்ளன. இவற்றில் பத்துக்கும் குறைவான சிங்களப் பொலீஸாரே தற்போது தங்கள் குடும்பத்துடன் தங்கியிருக்கின்றனர். (ஐ-க-164)

## வகுப்பறை திறப்பு

சாவகச்சேரி, மார்ச்6

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் மூன்றரை லட்சம் ரூபாசெலவில் அமைக்கப்பட்ட 60 அடி நீளமான வகுப்பறைக் கட்டடத்தின் திறப்பு விழா கடந்த மாத இறுதியில் நடைபெற்றது.

தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மற்றும் பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ)

# குடும்பத்தலைவரை இழந்த பெண்களுக்கு தொழில் உதவி

## 'கியூடெக்' வழங்கியது

யாழ்ப்பாணம்,மார்ச்6

குடாநாட்டில் குடும்பத்தலைவர் காணாமற் போனதால் வாழ்க்கை நடத்தமுடியாத நிலையில் உள்ள 40 பெண்களுக்கு சுயதொழில்வாய்ப்புக்கான உதவியை மனித நேய நிலைய மூன்றேற்ற நிறுவனம் வழங்கியுள்ளது.

ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபா வீதம் இரண்டு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் மரணத்தைத் தழுவிக் கொண்டவர்களின் உறவினர்களுக்கும் -

1996ஆம் ஆண்டு கைதாகிக் காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கும் மட்டுமே உடனடியாக இந்த உதவி வழங்கப்பட்டிருப்பதாக கைதாகிக் காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

# விளையாட்டரங்கு

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,மார்ச்6

யாழ். மாவட்ட கல்விவலயங்களுக்கிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயகல்லூரி மைதானத்தில் இடம்பெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

### 16வயதுப் பிரிவு

மானிப்பாய் இ.க.எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

### 18 வயதுப்பிரிவு

நெல்லியடி ம.வி.எதிர் நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை. (ஐ-8-86)

## மெய்வல்லுநர்.....

(2 ஆம்பக்கத் தொடர்ச்சி)

பாளர் வி.பாலசிங்கமும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கமும் கலந்துகொள்வார்கள். (ஐ-135)

* * *

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நவரத்தின ரசா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஞா.தெய்வேந்திரராஜா கலந்து கொள்வார். (ஐ-180)

# இந்தியா தோல்வியின் விளிம்பில்

பெங்களூர்,மார்ச்6

இந்தியா - தென்ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ற் போட்டியின் நான்காவது நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் இந்திய அணி தனது இரண்டாவது 5 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக தென்ஆபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் 479 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கும்பிளே 6 விக்கெட்டுக்களையும், முரளிகார்த்திக் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய ஆட்ட நேர இறுதியில் 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. அஸாருதீன் 73 ஓட்டங்களுடனும் கும்ளே 14 ஓட்டங்களுடனும் ஆடிக் கொண்டிருந்தனர். பொஜே 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஐந்தாவது நாள் ஆட்டம் இன்று தொடரும். (ஐ-8)

# இலங்கை 88 ஓட்டங்கள்!

பெஷாவர்,மார்ச்6

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ற் போட்டி நேற்று பெஷாவரில் ஆரம்பமானது. ஆட்டம் மழை காரணமாக தாமதமாகவே தொடங்கியது. நேற்றைய ஆட்ட நேர இறுதியில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 2விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார். ஜெயசூரிய 30 ஓட்டங்களுடனும், அட்னெஸ் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அத்தபத்து 29 ஓட்டங்களுடனும், அரவிந்த 18 ஓட்டங்களுடனும் நேற்றைய ஆட்ட நேர இறுதியில் ஆடிக் கொண்டிருந்தனர். அக்தர், ரஸாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ற் போட்டியில் பாகிஸ்தான் அணியில் முதலாவது டெஸ்ற்றில் பங்குபற்றாத ஷகிட் அப்றிடி, அஸார், அலி ஹூஸன், சொய்ப் அக்தர் ஆகியோர் அக்ரம், சக்லைன், மொயின்கான், வஸீம் ஆகியோருக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இலங்கை அணியில் அர்னல்ட் ரணதுங்கவுக்குப் பதிலாக டில்ஷான் சேர்க்கப்பட்டுள்ளார். இரண்டாம்நாள் ஆட்டம் இன்று தொடரும். (ஐ-8)

# ரெலிக்கொம் நூதனசாலை

தொலைத் தொடர்புச் சேவையின் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் நூதனசாலை ஒன்றை ரெலிக்கொம் நிறுவனம் அமைக்கவிருக்கின்றது.

இந்தச் சேவையின் தோற்றம் அதன் முன்னேற்றம் தொடர்பாக மக்களுக்கு விளக்கும் வகையில் அமையவிருக்கும் நூதனசாலையில் பழைய தொலைத் தொடர்புக் கருவிகள், புகைப்படங்கள் ஆகியன வைக்கப்படவுள்ளன. இந்தத் துறையுடன் சார்ந்த பழைய கருவிகள், படங்கள் ஆகியவற்றை வைத்திருப்பவர்கள் அவற்றைத் தந்துதவுமாறு ரெலிக்கொம் நிறுவன பாவனையாளர் சேவைப் பணிப்பாளர் திஸ்ஸ ம அல்விஸ் கோரியுள்ளார். (ஐ-க-3)

# கைதாகிக் காணாமற்போனோர் குடும்பத்தவர்களுக்கு நஷ்டஈடு

### அரச உயர் மட்டம் ஆராய்கிறது

குடாநாட்டில் கைதாகிக் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக அரச உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

இது விடயமாக பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து பூரண அறிக்கை ஒன்றை ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக ஆராய ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என்று கடந்த மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதி உறுதி அளித்திருந்தார் என்றும் -

அக்குழுவை அமைக்க -இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் - ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பென்டியிடம் கேட்டிருந்தார்.

இதற்கு பதில் அளிக்கையிலேயே நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக பாலபட்ட பென்டி தெரிவித்துள்ளார்.

(இ-3-164)

## ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான ஐ.தே.க. மனு குறித்து நாளை ஆராயப்படும்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதை எதிர்த்து ஐ.தே.கட்சித் தாக்கல் செய்த மனுக்குறித்து ஆராய்வதற்கென நாளை 7ஆம் திகதி கொழும்பில் விசேட கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.டி. சில்வா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு வருகை தருமாறு மனுவை தாக்கல் செய்த ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள, பிரதிவாதிகளான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மேற்படி மனுக்குறித்து அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி ஆராயப்படும்.

## அநாதரவாகக் கிடந்த பொருள் வெடித்து இருவர் காயமடைந்தனர்

வவுனியா,மார்ச்6

அநாதரவாகக்கிடந்த பொருளை எடுத்து தட்டிப் பார்த்த சமயம் அது வெடித்ததில் இரு வெவ்வேறு சம்பவங்களில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்கள் கிளிநொச்சியில் இடம்பெற்றன.

காயமடைந்தவர்களில் ஒருவர் பாலசிங்கம் விஜிதரன் (வயது 12) அநாதரவாக கிடந்த பொருள் ஒன்றை எடுத்து இவர் தட்டிப் பார்த்தபோது அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர் காயம் அடைந்தார்.

மற்றைய சம்பவத்தில் ரங்கசாமி சுதாகர் என்ற இளைஞன் அநாதரவாகக் கிடந்த பரா வெளிச்சக் குண்டு ஒன்றை எடுத்து வெடிக்க வைக்க முயன்ற சமயம் அது வெடித்ததில் மூன்று விரல்களை இழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-9)

### இளம் பெண் கிணற்றுக்குள் பலி

யாழ்ப்பாணம்,மார்ச்6

கிணற்றில் தண்ணீர் அள்ளிய போது தவறி விழுந்து உயிரிழந்ததாக தெரிவித்து இளம்பெண் ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சங்கானை, பல்லசுட்டி என்ற இடத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சின்னத்துரை உதயராணி (வயது 18) என்ற இளம் பெண்ணே மரணமானவராவர். (இ-15)

### திருமலையில் தாக்குதல்

திருகோணமலை,மார்ச்6

திருகோணமலை மாவட்டத்தில் பட்டித்திடல் என்னும் இடத்தில் ரோந்து வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கி இருந்து நேற்று அதிகாலை 6.30 மணியளவில் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். 2 படையினர் காயமடைந்தனர். (இ-3)

### சிறுவர் பாடசாலை

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினர் நடத்தி வரும் சிறுவர் பாடசாலை இன்று திங்கட்கிழமை மீண்டும் அதே இடத்தில் இயங்க இருப்பதாக நிலையத் தலைவர் செ.இராசரத்தினம் தெரிவித்துள்ளார். (இ-30)

### கப்பல்களிலிருந்து பொருள்கள்

அரியாலை,மார்ச்6

பருத்தித்துறை துறைமுகத்தில் 'ஹரண்டி', 'சயிந்த', 'கிரிந்த' ஆகிய கப்பல்களில் இருந்தும் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

(இ-17)

### ஒட்டிப் பிறந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் தலைப் பகுதி ஒட்டியுள்ளது. சத்திரசிகிச்சையின் மூலம் இக்குழந்தைகளை பிரித்தெடுத்தால் காப்பாற்ற முடியுமென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதற்காக இக் குழந்தைகளை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு பொது வைத்தியசாலை நிர்வாகம் செய்துள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகம் தெரிவித்தார்.

இக்குழந்தைகளில் ஒன்று மேலே பார்த்தவாறும் மற்றயது கீழே பார்த்தவாறும் தலைப்பகுதி ஒட்டப்பட்டு இருக்கிறது.

இக்குழந்தைகளின் தாய்க்கு ஏற்கனவே ஒரு குழந்தையுண்டு. இது இரண்டாவது பிரசவமாகும். சத்திர சிகிச்சை மூலமே இப்பிரசவம் நடைபெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-31)

## வவுனியா நலன்புரி நிலையத்தில் சன்னம் பட்டுச் சிறுவன் காயம்

வவுனியா,மார்ச்6

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்துக்கு முன்பாக விளையாடிக் கொண்டிருந்த 12 வயதுச் சிறுவன் ஒருவன் எங்கிருந்தோ ஏவப்பட்ட துப்பாக்கிச் சன்னத்துக்கு இலக்காகி காயமடைந்தான்.

கந்தசாமி சந்திரகுமார் (வயது 12) சிறுவனே காயமடைந்தவராவார்.

அதைத் தொடர்ந்து அங்கு விரைந்து படையினரும் பொலீஸாரும் முகாமில் தங்கியிருப்பவர்களை கடும் விசாரணைக்கு உள்ளாக்கியதாகவும் -

சன்னம் எங்கிருந்து வந்தது என்பதை அறிய மேலும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் - தெரிவக்கப்பட்டது.

(இ-3-9-164)

### சிறைக் கைதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 8 மணிமுதல் திருக்கேதீஸ்வரத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட பக்தர்கள் நண்பகல் 2.30 மணிவரையே அங்கு தங்க அனுமதிக்கப்பட்டனர். பக்தர்கள் பாலாவித் தீர்த்தக்கேணியில் ஸ்நானம் செய்யவும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். (இ-3)

### இராணுவத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஆள் சேர்க்கும் பணி எதிர் வரும் 20ஆம் திகதி வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் -படைகளில் இருந்து தப்பி ஓடியவர்களை மீளச் சேர்ப்பதற்காக அளிக்கப்பட்ட மன்னிப்புக்கு பலன் கிடைத்துள்ளது என்றும் -

இதுவரை 3ஆயிரத்து 19 பேர் இணைந்துள்ளனர் என்றும் - ஆள் சேர்ப்புக்கு பொறுப்பான அதிகாரியான கேணல் உனரத்ன தெரிவித்தார். (இ-3-164)

### பாடசாலை மீண்டும் பழைய இடத்தில்

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் இன்று திங்கள் முதல் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

### அடையாளம் காணப்பட்டது

கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை படையினரின் சூட்டுக் இலக்காகி மரணமானவரின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைத்து நேற்று அவரது தகப்பனால் அடையாளம் காணப்பட்டது. (இ-15)


நாளை ஆரம்பம்!

கணக்கீடு D.Sam

பிரத்தியேக வகுப்பு (76/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்)

A/L 2000

கம்பனி முடிவுக் க/கு

செவ்., வியா. 5.00-6.00 (மாலை)

A/L 2000

உற்பத்திக் க/கு

செவ்., வியா. 6.15 - 7.15 (காலை)

(C/11319)

சித்தி விநாயகர் கல்வி நிலையம்

K.K.S. வீதி, மல்லாகம்.

A/L 2002

கணக்கீடு

ஆரம்பம்

07.03.2000

செவ்வாய் - 3.00

ஆசிரியர்: D.Sam

(C/11318)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
30 - 05 - 1942



உதிர்வு
29 - 02 - 2000

அமரர்

## பொன்னையா வேலாயுதம்

(வெக்டர் வேலாயுதம்)

நெஞ்சம் வேகுதய்யா - உங்கள்
பிரிவுதனைக் கேட்கையிலே
தஞ்சம் என்று வந்த எமக்கு - கணித
தத்துவத்தைக் கற்பித்து
பல்கலைக்கழகத்துள் நுழைய
வைத்த தெய்வமே - நாம்
'கண்ணீர் கடலில் மூழ்குகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்

பொறியியல் பீட மாணவர்கள்,
மொறட்டுவப் பல்கலைக்கழகம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வானை சிவகுரு

மருதங்கண்டு, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வாரியத்தனை கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை சிவகுரு நேற்று (05.03.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா சிவகுருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மீனாட்சி, இராசம்மா, வேலாயுதம் (வைத்திய அதிகாரி, கரவெட்டி), தங்கமணி, புவனேஸ்வரி, சரஸ்வதி, கந்தசாமி (ரெலிகொம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இளைய தம்பி, கெங்காதரன், சுந்தரமூர்த்தி (பிரதம பொறியியலாளர், நிர்மாணத் திணைக்களம்), அம்பலவாணர் (உதவிக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டி), தனபாலசிங்கம் (ப.நோ.கூ.சங்கம், கட்டைவேலி, நெல்லியடி), நிர்மலாதேவி, சுமதி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாந்தசொரூபன் (பொறியியலாளர், கொழும்பு), சத்தியசொரூபன் (சுவிஸ்), ஆனந்தசொரூபன் (லண்டன்), சாமினி, சுதர்சன் (கிராமிய வங்கி, ப.நோ.கூ.சங்கம், கட்டைவேலி, நெல்லியடி), சதீஸ்குமார் (B.Sc., Accontant), பிறேமலதா (இலங்கை வங்கி, சுன்னாகம்), சுவர்ணலதா (யாழ். பல்கலைக்கழகம்), ரமேஸ்குமார் (மொரட்டுவ பல்கலைக்கழகம்), சுகந்தி (யாழ். பல்கலைக்கழகம்), சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), அனுராதா (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), அனுதீபா, வைதேகி (யா/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை), வாசுகி, துவாரகன், கோகுலன், சிவசங்கரி, கௌரிசங்கரி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2000) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.வேலாயுதம்
(மகன்)
(வைத்திய அதிகாரி, கரவெட்டி)

வாரியத்தனை,
கரவெட்டி மத்தி.
(C/11321)

## யோவான் சூசைப்பிள்ளை

தோலகட்டி வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட யோவான் சூசைப்பிள்ளை நேற்று (05.03.2000) ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி இராமநாதபுரத்தில் காலமானார்.

அன்னார் ஞானம்மாவின் அன்புக் கணவரும் அல்வினஸ் (கொழும்பு), யோசப் இரத்தினம், மாசில்லாமணி (சவுதி), பிறேமதாஸ் (பிரான்ஸ்), மேரி மெற்றலீன், மேரி நவம், மேரி யோகம், மேரி புனிதம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவராணி, ஜெயராணி, வவா (புத்தளம்), ஜேட்டுட் தேவசகாயம், ஜேக்கப் ஜெயரட்ணம், ஜேசுதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கிளிநொச்சி இராமநாதபுரத்தில் இன்று (06.03.2000) திங்கட்கிழமை நடைபெறும்.

தகவல்:
யோசப் இரத்தினம் (மகன்)
தே.மேரி நவம் (மகள்)
தேவசகாயம் (மருமகன்)
பேரப்பிள்ளைகள்.

10/1, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
(74232)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.